# 1) இந்திய அரசியலமைப்பிற்கு முந்தைய சட்டங்கள்

- ✓ பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி இந்தியாவில் வணிகம் செய்ய, பட்டயத்தினை அளித்தவர் யார் ? **குயின் எலிசபெத் - 1**
- ✓ இந்தியாவில் பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சி நடைபெற்ற காலம் எது ? **1773 முதல் 1858 வரை**

## ➢ ஒழுங்குமுறைச் சட்டம்: 1773:

- ✓ கம்பெனியின் நிர்வாகத்தை சீர்படுத்த கொண்டுவரப்பட்டது.
- ✓ வங்காளத்தின் கவர்னர் பதவி வங்காளத்தின் "**கவர்னர் ஜெனரல்**" ஆனது.
- ✓ வங்காளத்தின் முதல் கவர்னர் ஜெனரல் யார் ? **வாரன்ஹேஸ்டிங்க்ஸ்.**
- ✓ 1774 - ல் கல்கத்தாவில், உச்சநீதிமன்றத்தை அமைத்து.
- ✓ 4 பேருடைய நிர்வாக கவுன்சில் உருவாக்கப்பட்டது.

## ➢ பிட் இந்தியச் சட்டம், 1784:

- ✓ ஒழுங்குமுறைச்சட்டம், 1773 - உள்ள குறைபாடுகளைக் களைய பிரிட்டிஷ் பிரதமர் **வில்லியம்ஸ் பிட்-டினால்** கொண்டு வரப்பட்டது.
- ✓ 6 உறுப்பினர்களை உடைய கட்டுப்பாட்டு வாரியம் (Board control) அமைக்கப்பட்டது.

www.Padasalai.Net

## ➢ பட்டயச் சட்டம், 1773:

- ✓ கிழக்கிந்திய கம்பெனி, இந்தியாவுடன் மேலும் 20 ஆண்டுகள் வணிகம் செய்ய அனுமதித்தது.

## ➢ பட்டயச் சட்டம், 1813:

- ✓ கிழக்கிந்திய கம்பெனியின் வணிக முற்றுரிமை நிறுத்தப்பட்டது.
- ✓ இந்தியாவின் கல்வி வளர்ச்சிக்காக 1 லட்சம் ரூபாய் முதன் முதலாக ஒதுக்கப்பட்டது. ஆனால் இத்தொகை செலவிடப்படவில்லை.

## ➢ பட்டயச் சட்டம், 1883:

- ✓ வங்காளத்தின் கவர்னர் ஜெனரல் பதவி, இந்தியாவின் "**கவர்னர் ஜெனரல்**" என மாற்றம்.
- ✓ இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல் யார் ? **வில்லியம் பெண்டிங் பிரபு.**
- ✓ 1835 - ல் ஆங்கிலக் கல்வி முறையை அறிமுகப்படுத்திய **மெக்காலே கல்விக்குழு** அமைக்கப்பட்டது.

## ➢ பட்டயச் சட்டம், 1853:

- ✓ இந்திய குடிமைப்பணி தேர்வுகளில் (ICS தேர்வுகள்) **இந்தியர்களும் கலந்து கொள்ள**

**அனுமதிக்கப்பட்டனர்**.

- ✓ 1854 – ல் இந்திய குடிமைப்பணிகளுக்கான **“மெக்காலே கமிட்டி”** அமைக்கப்பட்டது.
  இங்கிலாந்து ராணியின் ஆட்சிக்காலம்: **1858 முதல் 1947 வரை.**

## ➢ இந்திய அரசுச்சட்டம், ஆகஸ்ட் 2, 1858:

- ✓ 1857 – சிப்பாய்கலகத்தினைத் தொடர்ந்து இயற்றப்பட்டது.
- ✓ இச்சட்டம் **“Act for the Good Government of India”** எனப்படுகிறது.
- ✓ கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, இந்தியா, இங்கிலாந்து அரசியின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.
- ✓ இந்தியாவின் கவர்னர் ஜெனரல் பதவி, **“இந்தியாவின் வைசிராய்”** என மாற்றப்பட்டது.
- ✓ இந்தியாவின் முதல் வைசிராய் யார் ? **கானிங் பிரபு.**
- ✓ இங்கிலாந்து அரசியின் சார்பாக, இந்தியாவை நிர்வகிக்க இந்திய அரசுச் செயலாளர் (Secretary of state) பதவி உருவாக்கப்பட்டது.
- ✓ இந்தியாவின் முதல் அரசுச் செயலாளர் யார்? **சார்லஸ் வுட்.**
- ✓ அரசுச் செயலருக்கு உதவிட 15 பேரை உடைய **“இந்தியா கவுன்சில்”** அமைக்கப்பட்டது.
- ✓ இங்கிலாந்தில் இருந்த இயக்குநர்கள் குழும், கட்டுப்பாட்டு வாரியமும் கலைக்கப்பட்டன.

## ➢ விக்டோரியா மகாராணியின் அறிக்கை:

- ✓ **1857 சிப்பாய்** கலகத்தைத் தொடர்ந்து அறிவிக்கப்பட்டது.
- ✓ **நவம்பர் 1, 1858** - ல் அலகாபாத்தில் கானிங் பிரபுவால் அறிவிக்கப்பட்டது.
- ✓ இது இந்திய **மக்களின் உரிமை சாசனம்** அல்லது **மேக்ன கார்ட்டா** எனப்படுகிறது.
- ✓ இவ்வறிக்கை இந்தியாவில் கம்பெனி ஆட்சி முடிவுக்கு வந்து, பிரிட்டிஷ் அரசியின் நேரடிக் கட்டுப்பாட்டில் இந்தியாவைக் கொண்டு வந்தது.

## ➢ இந்திய கவுன்சில் சட்டம், 1861:

- ✓ இந்தியாவிற்கென மத்திய சட்டமன்றம் உருவாக்கப்பட்டது.
- ✓ 1859 - ல் கானிங் பிரபு உருவாக்கிய அமைச்சர்கள் பதவி முறை (Portfolio system) அங்கீகரிக்கப்பட்டது.

## ➢ இந்திய கவுன்சில் சட்டம், 1892:

- ✓ பட்ஜெட்டில் விவாதிக்கும் உரிமை இந்தியர்களுக்கு வழங்கப்பட்டது.

## ➢ இந்திய கவுன்சில் சட்டம், 1909:

- ✓ **மின்டோ - மார்லி** சீர்த்திருத்தம் என அழைக்கப்படுகிறது.
- ✓ இந்தியாவின் வைசிராய் மின்டோ மற்றும் இந்தியாவிற்கான **அரசுச் செயலர் மார்லி** ஆகியோரால் உருவாக்கப்பட்டது.
- ✓ முஸ்லீம்களுக்கென **தனித்தொகுதி** (Separate Electorate) வழங்கப்பட்டது.
- ✓ வகுப்பு வாத தேர்தல் முறையின் தந்தையர்? **மின்டோ பிரபு.**

www.Padasalai.Net

- ✓ வைசிராயின் நிர்வாகக் குழுவில் முதன் முதலாக இந்தியர் ஒருவர் நியமிக்கப்பட்டார். அவ்வாறு முதன் முதலில் நியமிக்கப்பட்ட இந்தியர்: **சத்யேந்திர பிரசாத் சின்ஹா.**

## ➢ இந்திய அரசுச் சட்டம், 1919:

- ✓ **மாண்டேகு செமஸ்போர்டு** சீர்திருத்தம் என அழைக்கப்படுகிறது.
- ✓ மாண்டேகு - இந்திய செயலர்; செம்ஸ்போர்டு - இந்திய வைசிராய்.
- ✓ மாகாணங்களில் **இரட்டை ஆட்சிமுறை** (Lyarky) அறிமுகப்படுத்தப்பட்டது.
- ✓ மத்தியில் ஈரவை சட்டமன்றம் உருவாக்கப்பட்டது.
- ✓ முதன் முதலில் நேரடித் தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
- ✓ இந்தியர்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.
- ✓ ஆங்கிலோ இந்தியர்கள், சீக்கியர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் ஐரோப்பியர்களுக்கும் தனித்தொகுதிகள் வழங்கப்பட்டன.
- ✓ இச்சட்டத்தின் குறைபாடு : மாகாணங்களில் இரட்டை ஆட்சி அறிமுகப்படுத்தப்பட்டதாகும்.
- ✓ இச்சட்டத்தின் பரிந்துரைப்படி, 1926 - ல் மத்தியப் பொதுப்பணியாளர் தேர்வாணையம் அமைக்கப்பட்டது.
- ✓ மத்தியப் பொதுப்பணியாளர் தேர்வாணையம் அமைக்க பரிந்துரைத்த கமிட்டி : **லீ** கமிட்டி (1923 - 24)

## ➢ இந்திய அரசுச் சட்டம் - 1935:

www.Padasalai.Net

- ✓ இச்சட்டம், சைமன் குழுவின் அறிக்கை, மூன்று வட்டமேசை மாநாடுகளின் முடிவுகள், 1933 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசின் வெள்ளை அறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது.
- ✓ மாகாணங்களில் இரட்டை ஆட்சி ஒழிக்கப்பட்டது.
- ✓ மத்தியில் இரட்டை ஆட்சி பரிந்துரைக்கப்பட்டது.
- ✓ மாகாணங்களில் **தன்னாட்சி / சுயாட்சி** அறிமுகப்படுத்தப்பட்டது.
- ✓ பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களும் சுதேச அரசுகளும் இணைந்த அனைத்திந்திய கூட்டாட்சி அரசாங்கம் உருவாக்க பரிந்துரைக்கப்பட்டது.
- ✓ மத்திய அரசின் அதிகாரங்கள், கூட்டாட்சி, மாகாண, பொதுப்பட்டியல்களாகப் பிரிக்கப்பட்டது.
- ✓ 1935 - ல் மத்திய கூட்டாட்சி ரிசர்வ் வங்கி தோற்றுவிக்கப்பட்டது.
- ✓ 1937 - ல் டெல்லியில் கூட்டாட்சி உச்சநீதிமன்றம் அமைக்கப்பட்டது.
- ✓ 1937 - ல் தமிழ்நாட்டில் சட்ட மேலவை உருவாக்கப்பட்டது.
- ✓ 1937 - ல் பர்மா இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்டது.

## ➢ கேபினட் தூதுக்குழு / அமைச்சரவை தூதுக்குழு அறிக்கை 1946:

- ✓ கேபினட் தூதுக்குழு **கிளமன்ட் அட்லி** அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டது.
- ✓ மே 16, 1946 - ல் **பெதிக்லாரன்ஸ், ஏ.வி. அலக்சாண்டர், சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ்** ஆகிய மூவர் குழுவால் அறிவிக்கப்பட்டது.

- ✓ இந்திய அரசியலமைப்புச் சட்டத்தினை உருவாக்க புதிதாக அரசியல் நிர்ணயசபை ஏற்படுத்தப்படும் என அதிகாரப்பூர்வமாக அறிவித்தது.
- ✓ இப்பரிந்துரைப்படி ஜவஹர்லால் நேரு தலைமையில் செப்டம்பர் 2, 1946 ல் இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட்டது.

## ➢ மேளண்ட் பேட்டன் திட்டம் (ஜீன் 3, 1947):

- ✓ ஜீன் - 3 திட்டம் எனப்படுகின்றது.
- ✓ இந்தியா - பாகிஸ்தான் எனும் இருநாடுகள் பிரிக்கப்படுவதை அதிகாரப்பூர்வமாக அறிவித்த திட்டமாகும்.

## ➢ இந்திய சுதந்திரச் சட்டம், 1947:

- ✓ பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நாள்: ஜீலை 18, 1947.
- ✓ இச்சட்டம் நடைமுறைக்கு வந்த நாள் : ஆகஸ்ட் 15, 1947.
- ✓ ஆகஸ்ட் 14, 1947 - ல் பாகிஸ்தானும், ஆகஸ்ட் 15, 1947 - ல் இந்தியாவும் விடுதலை அடைந்துன.
- ✓ இந்தியா சுதந்திரமடைந்த போது இந்தியாவின் வைசிராய் யார்? **மெளண்ட் பேட்டன்**.
- ✓ சுதந்திர இந்தியாவின் கடைசி வைசிராய் யார்? **ராஜாஜி.**
- ✓ சுதந்திர இந்தியாவின் முதலும் கடைசியுமான இந்திய வைசிராய் - **ராஜாஜி**.

www.Padasalai.Net

## 2. இந்திய அரசியலமைப்பின் உருவாக்கம்

1. இந்திய அரசியலமைப்பை உருவாக்குவதற்காக அரசியல் நிர்ணய சபை அமைக்க முதன் முதலில் கோரிக்கை வைத்தவர் யார்?
   - ♣ 1934 – ல் எம்.என்.ராய்
   - ♣ 1935 - ல் காங்கிரஸ்
   - ♣ 1938 - ல் ஜவஹர்லால் நேரு
2. இந்திய அரசியல் நிர்ணய சபை அமைக்க ஒப்புதல் அளித்த குழு எது?
   **கேபினட் தூதுக்குழு 1946**
3. அரசியல் நிர்ணய சபையின் மொத்த உறுப்பினர்கள் எத்தனை பேர்? **389**.
4. இதில் மாகாணங்களிலிருந்து 1 மில்லியன் மக்களுக்கு ஒருவர் என மறைமுகத்தேர்தல் மூலம் தேர்வு செய்யப்பட்டோர்: **296** பேர்
5. சுதேச அரசுகளினால் நியமிக்கப்பட்டோர்: **93** பேர்
6. அரசியல் நிர்ணய சபையில் இடம்பெறாத தலைவர்கள்
   **மகாத்மா காந்தி, முகமது அலி ஜின்னா**
7. அரசியல் நிர்ணய சபையின் முதல் கூட்டம் நடைபெற்ற நாள் எது? - **டிசம்பர் 9, 1946.**
8. இக்கூட்டத்தில் அரசியல் நிர்ணய சபையின் இடைக்கால தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்? **சச்சிதானந்த சின்ஹா**
9. அரசியல் நிர்ணய சபையின் இரண்டாவது கூட்டம் நடைபெற்ற நாள் : **டிசம்பர் 11, 1946**.
10. இதில் அரசியல் நிர்ணய சபையின் நிரந்தர தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?
    **டாக்டர்.ராஜேந்திர பிரசாத்**
11. அரசியல் நிர்ணய சபையின் துணைத்தலைவர் யார்?

**ஹரேந்திரா குமார் முகர்ஜி (எச்.சி.முகர்ஜி)**

12. அரசியல் நிர்ணய சபையின் ஆலோசகர் யார்?
**பெனிகல் நர்சிங் ராவ் (பி..என்.ராவ்)**
13. ஜவஹர்லால் நேரு "குறிக்கோள் தீர்மானத்தினை" கொண்டு வந்த நாள்?
**டிசம்பர் 13, 1946**
14. .அரசியலமைப்பின் அனைத்து பகுதிகளும் இயற்றப்பட்ட பின்னர் முகவுரையாக ஏற்கப்பட்டது எது? **குறிக்கோள் தீர்மானம்**
15. முகவுரையின் சிற்பி யார்? **ஜவஹர்லால் நேரு**
16. இந்திய அரசியல் நிர்ணய சபையில் வரைவுக்குழு அமைக்கப்பட்ட நாள் :
**ஆகஸ்ட் 29, 1947**
17. அரசியலமைப்பின் வரைவுக் குழுவின் தலைவர் யார்? **டாக்டர்.பி.ஆர். அம்பேத்கர்**
18. வரைவுக்குழுவின் உறுப்பினர்கள் யாவர்?
    - என்.கோபாலசாமி அய்யங்கார்
    - அல்லாதி கிருஷ்ணசாமி அய்யர்
    - டாக்டர்.கே.எம்.முன்ஷி
    - சையத் முகமத் சதுல்லா
    - என்.மாதவராவ் (பி.எல்.மிட்டர் பதவி விலகிய பிறகு)
    - டி.டி.கிருஷ்ணமாச்சாரி (டி.பி.கெய்தான் இறந்த பிறகு)
19. வரைவுக் குழு வரைவு அரசியலமைப்பை அளித்த நாள் : **பிப்ரவரி 21 1948**
20. இந்திய அரசியலமைப்பின் தந்தை யார்? **டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர்**
21. இந்திய அரசியலமைப்பின் சிற்பி மற்றும் நவீன மனு எனப்படுவர்?
**டாக்டர்.பி.ஆர். அம்பேத்கர்**
22. அரசியல் நிர்ணய சபையின் அடிப்படை உரிமைகள் குழுவின் தலைவர்.
**சர்தார் பட்டேல்**
23. மத்திய அரசியலமைப்புக் குழு தலைவர்: **ஜவஹர்லால் நேரு**
24. மாநில அரசியலமைப்புக் குழு தலைவர்: **சர்தார் பட்டேல்**
25. தேசியக் கொடிகளுக்கான குழுவின் தலைவர்: **ஜே.பி.கிருபளாணி**
26. இந்திய அரசியலமைப்பு சட்டமாக இயற்றப்பட்டு இந்திய மக்களால் அரசியல் நிர்ணய சபை மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்ட நாள்: **நவம்பர் 26, 1949**
27. இந்திய அரசியல் நிர்ணய சபையின் கடைசிக் கூட்டம் நடைபெற்ற நாள்:
**ஜனவரி 24, 1950**
28. இந்திய அரசியலமைப்பில் கையெழுத்திட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை: **284**
29. இந்திய அரசியலமைப்பு யாருடைய கையெழுத்தில் அழகாக உருவாக்கப்பட்டது?
**பிரேம் பிகாரி நரெய்ன் ரைசடா**
30. இந்திய அரசியலமைப்பினை அழகுப்படுத்தியோர்?
**ராம்மனோகர் சின்ஹா,நந்தலால் போஸ்**
31. இந்திய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த நாள்: **ஜனவரி 26, 1950**
32. இந்திய அரசியலமைப்பை உருவாக்க ஆன காலம்:
**2 வருடம் 11 மாதங்கள் 18 நாட்கள்**
33. இந்திய அரசியல் நிர்ணய சபை கூடிய நாட்கள்: 165 **நாட்கள், 11 கூட்டங்கள்**
34. வரைவு அரசியலமைப்பு உருவாக்கப்பட்ட ஆன நாட்கள்: 114 **நாட்கள்**
35. இந்திய அரசியலமைப்பை உருவாக்க செலவிடப்பட்ட பணம்: 64 **லட்சம்**

www.Padasalai.Net

36. உலகின் நீளமான எழுதப்பட்ட அரசியலமைப்பு : **இந்திய அரசியலமைப்பு**
37. இந்திய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தபோது எதனைக் கொண்டிருந்து?
    - முகவுரை
    - 22 பகுதிகள்
    - 8 அட்டவணைகள்
    - 395 விதிகள்

38. இந்திய அரசியலமைப்பில் தற்போதுள்ளவை?
    - முகவுரை
    - 25 பகுதிகள்
    - 12 அட்டவணைகள்
    - 465 விதிகள்
39. இந்திய அரசியலமைப்பு நடைமுறைக்கு வருவதற்கு முன்பாகவே, நவம்பர் 26, 1949 அன்றே நடைமுறைக்கு வந்த பகுதிகள் யாவை:
    - குடியுரிமை
    - தேர்தல்
    - தற்காலிக பாராளுமன்றம்
    - குறுந்தலைப்புகள்
40. இந்திய அரசியல் நிர்ணய சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நாட்கள்:
    - குறிக்கோள் தீர்மானம் - ஜனவரி 22, 1947
    - தேசியக் கொடி - ஜீலை 22, 1947
    - தேசியக் கீதம் - ஜனவரி 24, 1950
    - தேசியப்பாடல் - ஜனவரி 24, 1950
    - தேசிய சின்னம் - ஜனவரி 26, 1950
    - தேசிய நாட்காட்டி - மார்ச் 22, 1957
41. இந்திய அரசியலமைப்பின் முதல் திருத்தம் வெளியிட்ப்பட்ட ஆண்டு: **1951**
42. இந்தியாவின் முதல் பாராளுமன்ற தேர்தல்; **1952**.
43. டெல்லி தேசிய தலைநகரப்பகுதியாக அறிவிக்கப்பட்ட ஆண்டு : **1991**.

www.Padasalai.Net

## 3. இந்திய அரசியலமைப்பின் ஆதாரங்கள்

### 1) 1935 இந்திய அரசுச்சட்டம்

- கூட்டாசி அரசாங்க முறை
- மாநில ஆளுநர் பதவி
- கூட்டாசி நீதித்துறை
- பணியாளர் தேர்வாணையங்கள்
- நெருக்கடி நிலை பிரகடனங்கள்

## 2) இங்கிலாந்து அரசியலமைப்பு:

- பாராளுமன்ற முறை அரசாங்கம்
- சட்டத்தின் ஆட்சி (Rule of law)
- ஒற்றைக்குடியுரிமை
- நீதிப்பேராணை
- ஈரவை (மேலவை,கீழவை) முறை (Bicemeralism)
- கேபினட் முறை (cabriet)
- தலைமை தணிக்கை கட்டுப்பாட்டு
- அதிகாரி (CAG) பதவி

## 3) அமெரிக்க அரசியலமைப்பு:

- அடிப்படை உரிமைகள்
- நீதிமறு ஆய்வு (judicial Reyiaw)
- நீதித்துறையின் சுதந்திரம்
- குடியரசுத்தலைவரின் பதவி நீக்கம்
- உச்சநீதிமன்ற / உயர்நீதிமன்ற
- நீதிபதிகளின் பதவிநீக்கம்
- துணைக்குடியரசுத் தலைவர் பதவி
- முகவுரை

www.Padasalai.Net

## 4) அயர்லாந்து அரசியலமைப்பு:

- அரசு கொள்கையின் வழிகாட்டு நெறிமுறைகள், (DPSP)
- குடியரசுத் தலைவர் தேர்தல் முறை ராஜ்யசபா உறுப்பினர்களை
- ஜனாதிபதி நியமித்தல் (Nomination)

## 5) கனடா:

- வலிமையான மத்திய அரசினை உடைய கூட்டாட்சி
- எஞ்சிய அதிகாரங்கள் மத்திய அரசிடம் இருப்பது
- மாநில ஆளுநர்களை மத்திய அரசு நியமிப்பது
- உச்சநீதிமன்றத்தின் ஆலோசனை வழங்கும் அதிகாரம்

## 6) ஆஸ்திரேலியா:

- பொதுப்பட்டியல் (Concurrent List) பாராளுமன்ற ஈரவை கூட்டுக்கூட்டம் வணிகம், வியாபாரம் தொடர்பான சுதந்திரம்

### 7) ஜெர்மனி (வெய்மர் அரசியலமைப்பு):

- நெருக்கடி நிலை காலங்களில் அடிப்படை உரிமைகளை தற்காலிகமாக நிறுத்தி வைத்தல்

### 8) ரஷ்யா:

- அடிப்படைக் கடமைகள்
- ஐந்தாண்டுத் திட்டம்
- முகவுரையிலுள்ள நீதி (justice)

### 9) தென் ஆப்பிக்கா:

- அரசியலமைப்பை திருத்தும் நடைமுறைகள்
- ராஜ்யசபா உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பது

### 10) பிரான்ஸ் அரசியலமைப்பு:

- ✓ முகவுரையிலுள்ள சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், குடியரசு

## 4) இந்திய அரசியலமைப்பின் பகுதிகள்

ஆரம்பத்தில் : 22 பகுதிகள் தற்போது : 25 பகுதிகள்

| பகுதிகள் | பொருளடக்கம் |
|---|---|
| I. | இந்திய ஒன்றியமும் அதன் பகுதிகளும் (விதிகள் 1-4) |
| II. | குடியுரிமை (விதி 5 - 11) |
| III. | அடிப்படை உரிமைகள் (விதி 12 - 35) |
| IV. | அரசு கொள்கையினை வழிகாட்டும் நெறிமுறைகள் (DPSP) (விதி 36 - 51) |
| IV- A | அடிப்படை கடமைகள் (விதி 51 - A), **42 வது திருத்தம் 1976- ன் மூலம் சேர்க்கப்பட்டது**. |
| V. | மத்திய அரசு (அ) ஒன்றியம் (விதி 52- 151) |
| VI. | மாநில அரசாங்கங்கள் (விதி 152 -237) |
| VII. | விதி 238 நீக்கப்பட்டுவிட்டது; 7 வது திருத்தம் 1956 ன் மூலம் பகுதி VII-ம் பகுதி IX -ம் நீக்கப்பட்டது. |
| VIII. | யூனியன் பிரதேசங்கள் (விதி 239 - 242). |
| IX. | பஞ்சாயத்து ராஜ்யம் (விதி 243 - 243 O), 73 வது திருத்தம், 1992 -ன் மூலம் சேர்க்கப்பட்டது. |
| IX-A | நகராட்சி அமைப்புகள் (விதி 243 p - 243 ZG), 74 -வது திருத்தம், 1992 - ன் மூலம் சேர்க்கப்பட்டது. |
| X. | கூட்டுறவு சங்கங்கள் (விதி 243ZH - 243ZT) 97 வது திருத்தம், 2011 - ன் மூலம் சேர்க்கப்பட்டது. |
| XI. | அட்டவணையின் (ம) பழங்குடியின பிரதேசம் விதி 244 - 244 A (The Scheduled & Tribal Areas) |
| XII. | மத்திய மாநில அரசு உறவுகள் (விதி 245 - 263) |
| XIII. | நிதி, சொத்து, ஒப்பந்தங்கள் மற்றும் வழக்குகள் (விதி 264 - 300A) |

www.Padasalai.Net

| | |
|---|---|
| XIV. | இந்தியாவிற்குள்ளான வர்த்தகம், வணிகம் மற்றும் பரிமாற்றம் (விதி 301 - 307) |
| XIV-A | மத்திய மாநில அரசுகளின் கழான பணிகள், மத்திய மாநில தேர்வாணையம் (விதி 308 - 323) |
| IX-B | தீர்ப்பாயங்கள், **42 வது திருத்தம் 1976-ன்** மூலம் சேர்க்கப்பட்டது.(விதி 323A, 323B) |
| XV. | தேர்தல் மற்றும் தேர்தல் ஆணையம் (விதி 324 - 329A) |
| XVI. | SC,ST,OBC (ம) ஆங்கிலோ இந்தியர்களுக்கான சிறப்பு விதிகள் (விதி 330 - 342) |
| XVII. | ஆட்சி மொழி (விதி 343 - 351) |
| XVIII. | அவசரநிலை (அ) நெருக்கடி நிலை விதிகள் (விதி 352- 360) |
| XIX. | இதர விதிகள் (Miscellaneous) (விதி 361 - 367) |
| XX. | அரசியலமைப்பு திருத்தங்கள் (விதி 368) |
| XXI. | தற்காலிக (ம) சிறப்பு விதிகள் (விதி 369 - 392) |
| XXII. | குறுந்தலைப்பு, தொடக்கம், ஹிந்தியிலுள்ள அதிகாரமளிக்கும் வாக்கியம் மற்றும் நீக்கப்பட்டவை (விதி 393 - 395) |

## 5) அரசியலமைப்பின் அட்டவணைகள்

www.Padasalai.Net



http://www.trbtnpsc.com/2013/09/tnpsc-group-2-group-4-vao-exam-study.html

# 6) இந்திய அரசியலமைப்பின் முக்கிய விதிகள்

## ➢ இந்திய யூனியன் மற்றும் அதன் பிரதேசங்கள் (விதி 1-4):

விதி 1 : இந்திய யூனியன் மற்றும் அதன் பிரதேசங்களின் பெயர்
விதி 2 : முற்றிலும் புதிதாக ஒரு மாநிலத்தை அனுமதிப்பது அல்லது உருவாக்குதல்

| அட்டவணைகள் | பொருளடக்கம் |
|---|---|
| முதலாவது | 29 மாநிலங்கள் மற்றும் 7 யூனியன் பிரதேசங்களின் பெயர்கள் மற்றும் அவற்றின் பிரதேச அதிகாரங்கள் (விதி 1-4) |
| இரண்டாவது | குடியரசுத் தலைவர், ஆளுநர், நீதிபதிகள், சபாநாயகர், மேலவை தலைவர் போன்றோரின் சம்பளம், சலுகைகள், செலவுப்படிகள் |
| மூன்றாவது | மத்திய, மாநில அமைச்சர்கள், உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்றம் நீதிபதிகள், எம்.எல்.ஏ., எம்.பிக்கள் போன்றவர்களுக்கான பதவிப்பிரமாண உறுதிமொழி |
| நான்காவது<br>விதி 4, 80 | ராஜ்யசபா உறுப்பினர் இடங்களை மாநிலங்களுக்கு, யூனியன் பிரதேசங்களுக்கும் ஒதுக்கீடு செய்யும் விதிகள் |
| ஐந்தாவது<br>விதி 244 | பழங்குடியின் பகுதிகள் (ம) பழங்குடியின மக்கள் தொடர்பான நிர்வாகம் (ம) கட்டுப்பாட்டு விதிகள், (விதி 244) |
| ஆறாவது<br>விதி 244, 274 | அசோம், மேகாலயா, திரிபுரா,மிசோரத்தின் பழங்குடியின பகுதிகளின் நிர்வாகம் |
| ஏழாவது<br>விதி 246 | மத்திய மாநில அரசாங்களுக்கிடையே அதிகாரப்பங்கீடு பற்றியது<br>1. மத்தியப்பட்டியல் - 97 துறைகள், தற்போது 100 துறைகள்<br>2. பொதுப்பட்டியல் - 47 துறைகள், தற்போது 52 துறைகள்<br>3. மாநிலப்பட்டியல் - 66 துறைகள் , தற்போது 61 துறைகள்<br>4. மீதமுள்ளவை - எஞ்சியபட்டியல் |
| எட்டாவது<br>விதி 344 - 351 | அரசியலமைப்பினால் அங்கீகரிக்கப்பட்ட மொழிகள் பற்றியது. ஆரம்பத்தில் 14 மொழிகள் இருந்தன. தற்போது 22 மொழிகள் உள்ளன. |
| (ஆங்கிலம் இணைப்பு மொழி ஆகும் 8 வது அட்டவணையில் இல்லை) | முதல் 14 மொழிகள்: அஸாமி, பெங்காலி, குஜராத்தி, ஹிந்தி, கன்னடம், மலையாளம், தமிழ், காஷ்மீரி, உருது, மராத்தி, ஒடியா,பஞ்சாபி, சமஸ்கிருதம், தெலுங்கு, 15 வது, சிந்தி: 21 வது திருத்தம் 1967, 16,17,18 வது மொழிகள் முறையே கொங்கனி மணிப்பூரி, நேபாளி, 71 வது திருத்தம் 1992 மூலம்.<br>கடைசியாக சேர்ந்த 4 மொழிகள்: **போடோ, டோக்ரி,மைதிலி, சந்தாலி,** இவை 92 வது திருத்தம் **2003** ன் மூலம் சேர்க்கப்பட்டன. |
| ஒன்பதாவது<br>(விதி 31-B) | நிலச்சீருத்திருத்தம், நிலவரி, ஜமின்தாரி முறை ஒழிப்பு பற்றிய விதிவகைகள், 1951 ம் ஆண்டு முதல் அரசியலமைப்பு சட்டத்திருத்தம் மூலம் சேர்க்கப்பட்டது.<br>(இதில் உள்ள சட்டங்கள் நீதி மறு ஆய்விலிருந்து விலக்களிக்கப்பட்டது.) |
| பத்தாவது<br>(விதி 102, 191) | கட்சித்தாவல் தடைச்சட்டம்; **1985 ஆம் ஆண்டைய 52** வது திருத்தத்தின் மூலம் சேர்க்கப்பட்டது. |
| 11 வது<br>(விதி 243 - G) | பஞ்சாயத்து ராஜ்யம்: பஞ்சாயத்துகளின் அதிகாரம், கடமைகள் மற்றும் பொறுப்புகள்: 29 கடமைகள் பற்றியது; 73 வது திருத்தம் 1992 ன் மூலம் சேர்க்கப்பட்டது. |
| 12 வது<br>(விதி 243 -W) | நகர்பாலிகா சட்டம் - நகராட்சிகளின் அமைப்பு, அதிகாரம், 18 கடமைகள் பற்றியது. இது 74 வது திருத்தம், 1992 ன் மூலம் சேர்க்கப்பட்டது. |

www.Padasalai.Net

விதி 3 : ஏற்கனவே உள்ள மாநிலங்களின் எல்லை, பரப்பு, பெயரினை மாற்றம் செய்தல், அவற்றை மாற்றியமைத்து புதிய மாநிலங்களை உருவாக்குதல்.

**குடியுரிமை :** விதி 5 - 11 : (குடியுரிமை பாடத்தினைக் காணக்)

**அடிப்படை உரிமைகள் :** விதி 12 - 35 (அடிப்படை உரிமைகள் பாடத்தினைக் காண்க)

**அரசுக் கொள்கையின் வழிகாட்டு நெறிமுறைகள் (DPSP)** ; விதி 36 -51 (பாடப்பகுதியை காண்க)

**அடிப்படைக் கடமைகள்:** விதி 51 - A

## ➢ குடியரசுத்தலைவர் (ம) துணைக் குடியரசுத்தலைவர்:

விதி 52 : குடியரசுத் தலைவர் பதவி
விதி 53 : குடியரசுத் தலைவரின் நிர்வாக அதிகாரம்
விதி 54 : குடியரசுத் தலைவர் தேர்தல்
விதி 55 : குடியரசுத் தலைவர் தேர்தல் நடத்தப்படும் முறை (Manner)
விதி 56 : குடியரசுத் தலைவர் பதவிக்காலம்
விதி 57 : குடியரசுத் தலைவர் மறுநியமனம் செய்யப்படுதல்
விதி 58 : குடியரசுத் தலைவர் தகுதிகள்
விதி 60 : குடியரசுத் தலைவர் பதவியேற்பு உறுதிமொழி
விதி 61 : குடியரசுத் தலைவர் பதவி நீக்கம்
விதி 62 : குடியரசுத் தலைவர் பதவி காலியிடாமகும் போது தேர்தல் நடத்தப்பட வேண்டிய கால அவகாசம்
விதி 63 : துணைக் குடியரசுத் தலைவர் பதவி
விதி 64 : துணைக் குடியரசுத் தலைவர் - ராஜ்யசபையின் பதவி வழித்தலைவர் ஆவார்.
விதி 65 : குடியரசுத் தலைவர் இல்லாத போது அவர் பொறுப்புகளை துணைக் குடியரசுத் தலைவர் கவனிப்பார்.
விதி 66 : துணைக் குடியரசுத் தலைவர் தேர்தல்
விதி 67 : துணைக் குடியரசுத் தலைவரது பதவிக்காலம்
விதி 69 : துணைக் குடியரசுத் தலைவர் பதவிப் பிரமாணம்
விதி 67b: துணைக் குடியரசுத் தலைவர் பதவிநீக்கம்
விதி 72 : குடியரசு தலைவர், மரண தண்டனை மற்றும் பிற தண்டனைகளை மன்னிக்கும் அதிகாரம்

## ➢ மத்திய அமைச்சர்கள் (ம) பிரதமர்:

விதி 74 : குடியரசுத் தலைவருக்கு ஆலோசனையும், அறிவுரையும் வழங்க பிரதமர் தலைமையிலான அமைச்சரவை இருக்கும்.
விதி 75 : மத்திய அமைச்சர்கள் மற்றும் பிரதமரை குடியரசுத்தலைவர் நியமிப்பார்.

விதி 78 : மத்திய அரசு நிர்வாகம் குறித்து குடியரசுத்தலைவருக்கு பிரதமர் அறிக்கை அளிப்பார்.

## ➢ அட்டார்னி ஜெனரல்:

விதி 76 : இந்தியாவிற்கென அட்டார்னி ஜெனரல் ஒருவர் இருப்பார்.

## ➢ பாராளுமன்றம் : விதி: 79 - 123

விதி 79 : பாராளுமன்றம் என்பது குடியரசுத்தலைவர், ராஜ்யசபா, லோக்சபாவை உள்ளடக்கியது.
விதி 80 : ராஜ்யசபாவின் அமைப்பு
விதி 81 : லோக்சபாவின் அமைப்பு
விதி 82 : ஒவ்வொரு சென்சஸ்க்குப்பிற்கும் தொகுதி மறுவரையறை செய்வது
விதி 83 : பாராளுமன்ற ஈரவைகளின் ஆயுட்காலம்
விதி 84 : பாராளுமன்ற M.P. க்கான தகுதிகள்
விதி 85 : பாராளுமன்ற கூட்டத்தொடர், கூட்டத்தொடரைக் கூட்டுதல் குடியரசுத்தலைவர் லோக்சபாவைக் கலைத்தல்
விதி 86 : குடியரசுத்தலைவர் ஈரவைகளில் உரையாற்றுதல்
விதி 89 : ராஜ்யசபையின் தலைவர் (ம) துணைத் தலைவர்
விதி 90 : ராஜ்யசபை துணைத்தலைவர் பதவிநீக்கம்
விதி 93 : லோக்சபாவின் சபாநாயகர் (ம) துணை சபாநாயகர்
விதி 94 : லோக்சபா சபாநாயாகர், துணை சபாநாயகர் பதவி நீக்கம்
விதி 98 : பாராளுமன்ற தலைமைச் செயலகம்
விதி 99 : பாராளுமன்ற M.P. க்களின் பதவிப்பிரமாணம்
விதி 100 : பாராளுமன்ற வாக்கெடுப்பு, குறைவெண்
விதி 101 : பாராளுமன்ற M.P க்களின் பதவி காலியிடமாதல்
விதி 102 : பாராளுமன்ற M.P க்களின் தகுதியிழப்பு
விதி 108 : பாராளுமன்ற ஈரவைகளின் கூட்டுக்கூட்டம்
விதி 110 : பணமசோதா
விதி 111 : குடியரசுத்தலைவர் மசோதாவிற்கு ஒப்புதல் அளித்தல்
விதி 112 : பட்ஜெட் (ஆண்டு நிதிநிலை அறிக்கை)
விதி 117 : நிதி மசோதா
விதி 120 : பாராளுமன்றத்தில் பயன்படுத்தப்படும் மொழி
விதி 122 : பாராளுமன்ற விவகாரங்களில் நீதிமன்றங்கள் தலையிடாது
விதி 123 : குடியரசுத்தலைவரது அவசரச் சட்டமியற்றும் அதிகாரம்

www.Padasalai.Net

## ➢ உச்சநீதிமன்றம்:

விதி 124 : உச்சநீதிமன்றத்தின் அமைப்பு
விதி 125 : உச்சநீதிமன்ற நீதிபதிகளின் சம்பளம்
விதி 126 : பொறுப்பு தலைமை நீதிபதியை நியமித்தல்
விதி 127 : தற்காலிக நீதிபதிகளை நியமித்தல்
விதி 129 : உச்சநீதிமன்றம் ஒரு பதிவு நீதிமன்றமாகும்
விதி 130 : உச்சநீதிமன்றத்தின் இருப்பிடம்
விதி 131 : உச்சநீதிமன்றத்தின் மூலவழக்கு அதிகாரம்
விதி 132 : உயர்நீதிமன்றத்திலிருந்து வரும் சில வழக்குகளில் மேல்முறையீடு
விதி 133 : சிவில் வழக்குகளில் மேல்முறையீடு
விதி 134 : கிரிமினல் வழக்குகளில் மேல்முறையீடு
விதி 136 : சிறப்பு அனுமதி மூலம் மேல்முறையீடு

விதி 137 : உச்சநீதிமன்றத்தின் மறுசீராய்வு அதிகாரம்
விதி 143 : குடியரசுத்தலைவர் உச்சநீதிமன்றத்தின் ஆலோசனை கேட்டல்
விதி 146 : உச்சநீதிமன்ற அலுவர்கள்

## ➢ இந்திய தலைமைத் தணிக்கைக் கணக்காயவுத் தலைவர்:

விதி 148 ; இந்திய தலைமைத் தணிக்கை மற்றும் கணக்காய்வுத் தலைவர் பதவி
விதி 149 : GAG ன் பணிகள் மற்றும் அதிகாரங்கள்
விதி 150 : மத்திய மாநில அரசுகளின் கணக்குகளுக்கான படிவங்கள்
விதி 151 : GAG ன் தணிக்கை அறிக்கை

## ➢ மாநில ஆளுநர்:

விதி 152 : மாநிலம் என்பதன் வரையறை
விதி 153 : மாநில ஆளுநர் பதவி
விதி 154 : மாநில நிர்வாக அதிகாரங்கள் ஆளுநரிடம் இருக்கும்
விதி 155 : மாநில ஆளுநர் நியமனம்
விதி 156 : ஆளுநரின் பதவிக்காலம்
விதி 157 : ஆளுநரின் தகுதிகள்
விதி 159 : ஆளுநரின் பதவிப்பிரமாணம்
விதி 161 : ஆளுநர், தண்டனைகளை மன்னிக்கும் அதிகாரம்; ஆனால் மரண தண்டனையை மன்னிக்க முடியாது

www.Padasalai.Net

## ➢ முதலமைச்சர் (ம) மாநில அமைச்சர்கள்:

விதி 163 : முதலமைச்சர் பதவி ஆளுநருக்கு உதவியாக முதல்வர் தலைமையில் ஒரு அமைச்சரவை இருக்கும்.
விதி 164 : முதல்வர் (ம) அமைச்சர்கள் ஆளுநாரல் நியமிக்கப்படுவர்
விதி 165 : மாநிலத்தின் அட்வகேட் ஜெனரல்
விதி 167 : மாநில நிர்வாகம் குறித்து முதலமைச்சர் ஆளுநருக்கு அறிக்கை அனுப்புதல்

## ➢ மாநில சட்டமன்றம்

விதி 168 : மாநில சட்டமன்றங்களின் அமைப்பு
விதி 169 : சட்ட மேலவைகளின் உருவாக்கம் மற்றும் நீக்கம்
விதி 170 : சட்டப்பேரவையின் அமைப்பு
விதி 171 : சட்ட மேலவைகளின் அமைப்பு
விதி 172 : சட்டமன்றத்தின் ஆயுட்காலம்
விதி 174 : சட்டமன்ற கூட்டத்தொடரைக் கூட்டுதல், ஒத்திவைத்தல்; ஆளுநர் சட்டப்பேரவையைக் கலைத்தல்
விதி 175 : ஆளுநர் சட்டப்பேரவையில் உரையாற்றுதல்
விதி 178 : சட்டப்பேரவை சபாநாயகர், துணை சபாநாயகர்
விதி 182 : சட்டமேலவை தலைவர், துணைத்தலைவர்
விதி 190 : MLA பதவி காலியிடமாதல்
விதி 191 : MLA தகுதியிழப்பு

விதி 199 : மாநில பணமசோதா
விதி 200 : மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் அளித்தல்
விதி 201 : மாநில மசோதாவை, ஆளுநர் குடியரசுத்தலைவருக்கு அனுப்புதல்
விதி 202 : மாநில பட்ஜெட்
விதி 207 : மாநில நிதி மசோதா
விதி 210 : சட்டமன்றத்தில் பயன்படுத்தப்படும் மொழி
விதி 212 : சட்டமன்றத்தின் நடவடிக்கைகளில் நீதிமன்றம் தலையிடமுடியாது
விதி 213 : மாநில ஆளுநரின் அவசரச் சட்டமியற்றும் அதிகாரம்

## ➢ உயர்நீதிமன்றங்கள்:

விதி 214 : உயர்நீதிமன்றம் - மாநிலங்களுக்கென ஒரு உயர்நீதிமன்றம் இருக்கும்
விதி 215 : உயர்நீதிமன்றம் ஒரு பதிவு நீதிமன்றமாகும்
விதி 216 : உயர்நீதிமன்றத்தின் அமைப்பு
விதி 217 : உயர்நீதிமன்ற நீதிபதிகளின் நியமனம்
விதி 219 : உயர்நீதிமன்ற நீதிபதிகளின் பதவிப்பிரமாணம்
விதி 221 : உயர்நீதிமன்ற நீதிபதிகளின் சம்பளம்
விதி 222 : உயர்நீதிமன்ற நீதிபதிகளை குடியரசுத்தலைவர் பணியிடமாற்றம் செய்தல்
விதி 226 : உயர்நீதிமன்றங்களின் நீதிப்பேராணை அதிகாரம்
விதி 227 : அனைத்து கீழமை நீதிமன்றங்களின் மேல், உயர்நீதிமன்றத்தின் அதிகாரம்
விதி 230 : உயர்நீதிமன்றத்தின் அதிகாரம் யூனியன் பிரதேசங்களுக்குப் பொருந்துதல்
விதி 231 : ஒன்றிற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு பொதுவாக ஒரு உயர்நீதிமன்றம் அமைத்தல்
விதி 233 : மாவட்ட நீதிபதிகளின் நியமனம்
விதி 235 : கீழமை நீதிமன்றங்களின் மேலான கட்டுப்பாடுகள்

www.Padasalai.Net

## ➢ யூனியன் பிரதேசங்கள்:

விதி 239 : யூனியன் பிரதேசங்கள் நிர்வாகம்
விதி 239A : சில யூனியன் பிரதேசங்களுக்கு சட்டப்பேரவையும், அமைச்சரவையும் உருவாக்குதல்
விதி 239AA : டெல்லியின் சிறப்பு அதிகாரம்
விதி 239B : யூனியன் பிரதேச துணைநிலை ஆளுநரின் அவசரச்சட்டமியற்றும் அதிகாரம்
விதி 241 : யூனியன் பிரதேசங்களின் உயர்நீதிமன்றம்

## ➢ பஞ்சாயத்து ராஜ்யம்: விதி (243-243-0)

விதி 243 : பஞ்சாயத்து ராஜ்யத்திற்கான வரையறை
விதி 243A : கிராம சபை
விதி 243B : பஞ்சாயத்து அமைப்புகளை உருவாக்குதல்
விதி 243c : பஞ்சாயத்து முறைகளின் அமைப்பு
விதி 243D : பஞ்சாயத்துக்களில் பெண்கள், எஸ்சி, எஸ்டி பிரிவினருக்கு இட ஒதுக்கீடு
விதி 243E : பஞ்சாயத்துக்களின் ஆயுட்காலம்
விதி 243F : பஞ்சாயத்து உறுப்பினர்களின் தகுதியிழப்பு

விதி 243G : பஞ்சாயத்துக்களின் 29 கடமைகள் மற்றும் பொறுப்புகள்
விதி 243H : பஞ்சாயத்துக்களின் வரிவிதிப்பு அதிகாரம்
விதி 243I : பஞ்சாயத்துக்களுக்கான மாநில நிதிக்குழுவை அமைத்தல்
விதி 243J : பஞ்சாயத்துக்களின் கணக்குகளைத் தணிக்கை செய்தல்
விதி 243k : பஞ்சாயத்துக்களுக்கான தேர்தல் மற்றும் மாநில தேர்தல் ஆணையம்
விதி 243L : பஞ்சாயத்து ராஜ்யம் யூனியன் பிரதேசங்களுக்கு பொருந்தும்
விதி 243M : பஞ்சாயத்து ராஜ்யம் சில பகுதிகளுக்கு பொருந்தாது
விதி 243N : ஏற்கனவே உள்ள சட்டங்கள் தொடர்ந்து அமலில் இருக்கும்
விதி 243O : பஞ்சாயத்து தேர்தலில் நீதிமன்றங்கள் தலையிடாது

## ➢ நகர்பாலிகா 243P - 243ZG:

விதி 243P : நகராட்சி அமைப்புகளின் வரையறை
விதி 243Q : நகராட்சிகளை உருவாக்குதல்
விதி 243R : நகராட்சிகளின் அமைப்பு
விதி 243S : வார்டு குழுக்களை உருவாக்குதல்
விதி 243T : நகராட்சிகளில் பெண்கள், எஸ்சி, எஸ்டி இட ஒதுக்கீடு
விதி 243U : நகராட்சிகளின் ஆயுட்காலம்
விதி 243V : நகராட்சி கவுன்சிலர்களின் தகுதியிழப்பு
விதி 243W : நகராட்சிகளின் 18 கடமைகள், பொறுப்புகள்
விதி 243X : நகராட்சிகளின் வரிதிக்கும் அதிகாரம்
விதி 243Y : நகராட்சிகளுக்கான நிதி ஆணையம்
விதி 243Z : நகராட்சி கணக்குகளை தணிக்கை செய்தல்
விதி 243ZA : நகராட்சிகளுக்கான தேர்தல்
விதி 243ZB : நகராட்சி அமைப்புகள் யூனியன் பிரதேசங்களுக்கு பொருந்தும்
விதி 243ZC : நகராட்சி அமைப்புகள் சில பகுதிகளுக்கு பொருந்தாது
விதி 243ZD : மாவட்ட திட்டமிடுதலுக்கான குழு
விதி 243ZE : மெட்ரோபாலிட்டன் திட்டமிடுதல் குழு
விதி 243ZF : ஏற்கனவே உள்ள சட்டங்கள் தொடர்ந்து அமலில் இருக்கும்
விதி 243ZG : நகராட்சி தேர்தலில் நீதிமன்றங்கள் தலையிடாது

www.Padasalai.Net

## ➢ கூட்டுறவு சங்கங்கள்: பகுதி IX-B, விதி243ZH - 243ZT

விதி 243ZI : கூட்டுறவு சங்கங்களை அமைத்தல்
விதி 243ZK : கூட்டுறவு சங்கத் தேர்தல்
விதி 243ZM : கூட்டுறவு சங்க கணக்குகளை தணிக்கை செய்தல்
விதி 243ZS : கூட்டுறவு சங்கங்களின் யூனியன் பிரதேசங்களுக்கு பொருந்தும்
விதி 244 : அட்டவனையிடப்பட்ட மற்றும் பழங்குடியின பிரதேசங்களின் நிர்வாகம்

## ➢ மத்திய, மாநில அரசு உறவுகள்:

விதி 248 : எஞ்சிய அதிகாரங்கள் மத்திய அரசிடம் இருக்கும்
விதி 249 : தேசிய நலன் கருதி மாநிலப்பட்டியிலில் உள்ள பொருளில் மத்திய அரசு சட்டமியற்றும் அதிகாரம்

விதி 250 : நெருக்கடி நிலை காலங்களில் மாநிலப்பட்டியிலின் எப்பொருளின் மீதும் மத்திய அரசு சட்டமியற்றும் அதிகாரம்

விதி 262 : மாநிலங்களுக்கிடையேயான நதிநீர் பிரச்சனைகளுக்கு தீர்வு காணுதல்; நதி நீர்த தீர்ப்பாயங்கள்

விதி 256 - 257 யின் படிதான் மையநிர்வாகம் ஒரு மாநிலத்திற்கு கட்டளை பிறப்பிக் முடியும்

விதி 263 : மாநிலங்களுக்கிடையேயான குழுவினை உருவாக்குதல்

விதி 266 : இந்திய தொகுப்பு நிதியம் மற்றும் இந்தியாவின் பொதுக்கணக்குகள், மாநிலங்களுக்கான தொகுப்பு நிதியம்

விதி 267 : அவசர செலவினங்களுக்கான நிதியம்

விதி 268A :சேவை வரி மத்திய அரசால் விதிக்கப்பட்டு, மத்திய, மாநில அரசுகளால் வசூலிக்கப்பட்டு பயன்படுத்தப்படுதல்

விதி 280 : மத்திய நிதிக்குழு

விதி 281 : மத்திய நிதிக்குழுவின் பரிந்துரைகள்

விதி 292 : இந்திய அரசினால் வாங்கப்படும் கடன்கள்

விதி 293 : மாநில அரசாங்கங்களின் கடன்கள்

## ➢ சொத்துரிமை : பகுதி- XII

விதி 300A : சட்டத்தின் படி அல்லாமல், எவரிடமிருந்து சொத்துரிமையை பறிக்க முடியாது

## ➢ பொதுப்பணிகள்:

www.Padasalai.Net

விதி 309 : மத்திய, மாநில அரசுப்பணியாளர்களின் பணிநியமனம், பணிநிலைகள்

விதி 310 : மத்திய மாநில அரசுப்பணியாளர்களின் பதவிக்காலம்

விதி 312 : அனைத்திந்திய பணிகளின் உருவாக்கம்

## ➢ பணியாளர் தேர்வாணையங்கள்: பகுதி XIV விதி 315 - 323

விதி 315 : மத்தியப்பணியாளர் தேர்வாணையம், மாநிலப்பணியாளர் தேர்வாணையும்

விதி 316 : மத்திய, மாநிலப் பணியாளர் தேர்வாணையங்களின் தலைவர், உறுப்பினர்களை நியமித்தல் அவர்களின் பதவிக்காலம்

விதி 320 : தேர்வாணையங்களின் பணிகள்

விதி 323 : தேர்வாணையங்களின் அறிக்கை

## ➢ தீர்ப்பாயங்கள்: பகுதி XIV-A

விதி 323A : நிர்வாகத் தீர்ப்பாய்ங்கள்

விதி 323B : இதர தீர்ப்பாயங்கள்

## ➢ தேர்தல்கள் மற்றும் தேர்தல் ஆணையம்: பகுதிXV, விதி 324 – 329A

விதி 324 : இந்திய தேர்தல் ஆணையம் - தேர்தல்களை நடத்துதல், மேற்பார்வையிடுதல், கட்டுப்படுத்துதல்

விதி 325 : சாதி, மத, இன, பாலின அடிப்படையில் எவரும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படுவதை தடுக்க முடியாது

விதி 326 : வயது வந்தோர் வாக்குரிமை (18 வயது)

## ➢ சில பிரிவினருக்கான சிறப்பு விதிகள்

விதி 330 : லோக்சபாவில் எஸ்சி, எஸ்டி வகுப்பினருக்கான இட ஒதுக்கீடு

விதி 331 : மக்களவையில் ஆங்கிலோ - இந்தியர்களின் பிரதிநிதித்துவம்

விதி 332 : சட்டப்பேரவைகளில் எஸ்சி, எஸ்டி இட ஒதுக்கீடு

விதி 333 : சட்டப்பேரவைகளில் ஆங்கிலோ இந்தியர்களின் பிரதிநிதித்துவம்

விதி 338 : தாழ்த்தப்பட்டோருக்கான தேசிய ஆணையம்

விதி 338A : பழங்குடியினருக்கான தேசிய ஆணையம்

விதி 340 : பிற்படுத்தப்பட்டோருக்கான ஆணையம்

விதி 341 : தாழ்த்தப்பட்ட வகுப்பினர்

விதி 342 : பழங்குடி வகுப்பினர்

## ➢ அலுவலக மொழிகள்: பகுதி XVIII , விதி 343 - 351

விதி 343 : மத்திய அரசின் அலுவலக மொழி

விதி 344 : அலுவலக மொழிகளுக்கென பாராளுமன்றம் ஒரு ஆணையம் அமைக்காலம்

விதி 345 : மாநிலத்தின் அலுவலக மொழி

விதி 346 : மத்திய - மாநில அரசுகள், மாநில அரசுகளுக்கிடையே தகவல் தொடர்புக்கு பயன்படும் அலுவலக மொழி

விதி 348 : உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றம், பாராளுமன்ற சட்டமன்ற சட்டங்கள், மசோதாக்களுக்கான அலுவலக மொழி

விதி 350 : பொதுமக்கள் குறைகளைக் களைவதற்காக மனுக்களை அளிக்கும் மொழி

விதி 350A : ஆரம்பக்கல்விநிலையில் தாய்மொழியில் கற்பித்தல்

விதி 350B : மொழிவாரி சிறுபான்மையினருக்கான சிறப்பு அலுவர் நியமனம்

விதி 351 : ஹிந்தி மொழியை மேம்படுத்துவதற்கான வழிகாட்டுதல்கள்

## ➢ நெருக்கடி நிலை பிரகடனங்கள்: பகுதி XVIII , விதி 352 - 360

விதி 352 : தேசிய நெருக்கடி நிலைப் பிரகடனம்

விதி 353 : தேசிய நெருக்கடி நிலை பிரகடனத்தின் விளைவுகள்

விதி 356 : மாநில நெருக்கடி நிலை / குடியரசுத்தலைவர் ஆட்சி

விதி 358 : தேசிய நெருக்கடி நிலையின் போது அடிப்படை உரிமைகளின் விதி 19 நிறுத்தி வைத்தல்

விதி 359 : தேசிய நெருக்கடி நிலையின் போது விதி 20 மற்றும் 21 தவிர மற்ற அடிப்படை உரிமைகளின் செயல்பாட்டினை நிறுத்தி வைத்தல்

விதி 360 : நிதி நெருக்கடி நிலைப் பிரகடனம்

விதி 365 : மத்திய அரசின் வழிகாட்டுதல்களை மாநில அரசு கடைபிடிக்க தவறும் போது மாநிலத்தில் குடியரசுத்தலைவர் ஆட்சியை ஏற்படுத்துதல்

www.Padasalai.Net

## ➢ அரசியலமைப்புதிருத்தம்: பகுதி - xx

விதி 368 : அரசியலமைப்பினை திருத்தம் செய்வதற்கான நடைமுறைகள்

## ➢ தற்காலிக மற்றும் சிறப்பு விதிகள்:

விதி 370 : ஜம்மு காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்து
விதி 371 : மகராஷ்டிரா, குஜராத்தின் சிறப்பு அந்தஸ்து
விதி 371A : நாகலாந்தின் சிறப்பு அந்தஸ்து
விதி 371B : அசாமின் சிறப்பு அந்தஸ்து
விதி 371C : மணிப்பூரின் சிறப்பு அந்தஸ்து
விதி 371D : ஆந்திரப்பிரதேசத்தின் சிறப்பு அந்தஸ்து
விதி 371E : ஆந்திரப்பிரதேசத்தில் மத்தியப் பல்கலைக்கழகம் அமைத்தல்
விதி 371F : சிக்கிமின் சிறப்பு அந்தஸ்து
விதி 371G : மிசோரத்தின் சிறப்பு அந்தஸ்து
விதி 371H : அருணாசலப்பிரதேசத்தின் சிறப்பு அந்தஸ்து
விதி 371J : கர்நாடகாவின் சிறப்பு அந்தஸ்து

## ➢ குறுந்தலைப்புகள், நடை முறைக்குவருதல்:

விதி 393 : அரசியலமைப்பின் குறுந்தலைப்புகள்
விதி 394 : அரசியலமைப்பின் பகுதிகள் நடைமுறைக்கு வருதல்
விதி 394A : ஹிந்தியில் அதிகாரமளிக்கும் வாக்கியம்
விதி 395 : நீக்கப்பட்டவை

www.Padasalai.Net

## 7. இந்திய அரசியலமைப்பின் முக்கிய திருத்தங்கள்

| | |
|---|---|
| 1 வது 1951 | நிலச்சீதிருத்தம், ஜமீன்தாரி முறை ஒழிப்பு, 9 வது அட்டவனை புதிதாக சேர்ப்பு |
| 7 வது 1956 | 1. மாநிலங்கள் மறுசீரமைப்பு: 14 மாநிலங்கள் 6 யூனியன் பிரதேசம் உருவாக்கம்<br>2. ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசத்திற்கு பொதுவாக ஒரு ஆளுநர் இருக்காலம்.<br>3. ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசத்திற்கு பொதுவாக ஒரு உயர்நீதிமன்றம் அமைக்கப்படலாம். |

| | |
|---|---|
| | 4. இது அரசியலமைப்பின் பகுதி VII மற்றும் IX னை நீக்கியது. |
| 9 வது 1960 | மேற்கு வங்கத்தின் பகுதியான பெருபாரி ஒன்றியம் பாகிஸ்தானுக்கு வழங்கப்பட்டது |
| 10 வது 1961 | தாத்ரா, நாகர்வேலி இந்திய ஒன்றியத்துடன் இணைக்கப்பட்டது. |
| 12 வது 1961 | கோவா, டாமன், டையூ, இந்திய யூனியனுடன் இணைக்கப்பட்டது. |
| 14 வது 1962 | புதுச்சேரி இந்திய யூனியனுடன் இணைக்கப்பட்டது. |
| 15 வது 1963 | உயர்நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது 60 லிருந்து 62 ஆக உயர்வு. |
| 21 வது 1967 | சிந்தி மொழி 8 அட்டவணையில், 15 வது மொழியாக சேர்க்கப்பட்டது. |
| 24 வது 1971 | 1. அடிப்படை உரிமைகள் உட்பட அரசியலமைப்பின் எந்த பகுதியையும் பாராளுமன்றம் திருத்தலாம்.<br>2. அரசியலமைப்பு திருத்த மசோதாவிற்கு குடியரசுத்தலைவர் கட்டாய ஒப்புதல் அளிக்க வேண்டும். |
| 26 வது 1971 | மன்னர் மானியம் ஒழிப்பு இந்திரகாந்தி. |
| 31 வது 1972 | லோக்சபா M.P எண்ணிக்கை 525 லிருந்து 545 ஆனது. (1971 சென்சஸ் படி) |
| 32 வது 1973 | தெலுங்கானா பகுதி மக்களுக்கான விதிகள் |
| 36 வது 1975 | சிக்கிம் முழுமையான மாநிலம் அந்தஸ்து பெற்றது. |
| 40 வது 1976 | இந்திய கடல் பகுதிகள்,கண்டத்திட்டுகள் பற்றியது. |
| 41 வது 1976 | மாநிலப் பொதுப்பணி ஆணையம் மற்றும் கூட்டுப் பொதுப்பணி ஆணையத்தின் உறுப்பினர்களின் ஓய்வு வயது 60 லிருந்து 62 உயர்வு |
| 42 வது 1976 | 1. இது ஸ்வரன்சிங் கமிட்டியின் பரிந்துரைபடி இந்திரா காந்தியின் அரசினால் உருவாக்கப்பட்டது.<br>2. சிறு அரசியலமைப்பு எனப்படுகிறது.<br>3. முகவுரையில் சமத்துவ, மதச்சார்பற்ற, ஒருங்கிணைந்த எனும் வார்த்தைகளைச் சேர்த்தது.<br>4. அடிப்படை கடமைகளை புதிதாக பகுதி IV-A வின் மூலம் சேர்த்து. (விதி 51-A)<br>5. பகுதி XIV-A வின் மூலம் நிர்வாகத் தீர்ப்பாயங்கள் (ம) மற்ற தீர்ப்பாயங்களை ஏற்படுத்தியது.<br>6. லோக்சபா மற்றும் சட்டமன்றங்களின் ஆயுட்காலம் 5 லிருந்து 6 ஆண்டாக உயர்வு.<br>7. குடியரசுத் தலைவர் அமைச்சரவையின் ஆலோசனையை கட்டாயமாக கேட்டு நடக்க வேண்டும்.<br>8. அகில இந்திய நீதிப்பணிகள் உருவாக்க வழிமுறைகள்.<br>9. கல்வி, காடுகள், வனவிலங்குகள் மற்றும் பறவைகள் காத்தல், எடை மற்றும் அளவுகள் நீதி நிர்வாகம், உச்ச, உயர்நீதிமன்றகளை தவிர மற்ற நீதிமன்றங்களை உருவாக்குதல் ஆகியவற்றை மாநிலப்பட்டியலிலிருந்து பொதுப்பட்டியலுக்கு மாற்றியது<br>10. குடியரசுத் தலைவர் ஆட்சியின் ஆயுட்காலம் ஒரு சமயத்தில் 6 மாதத்திலிருந்து 1 வருடமாக நீட்டிக்கப்பட்டது. |
| 44 வது 1978 | 1. மொரார்ஜி தேசாய் தலைமையிலான ஜனதா அரசு வெளியிட்டது.<br>2. 42 வது திருத்தம் 1976ல் இந்திரா காந்தி அறிமுகப்படுத்திய தவறுகளை சரிசெய்ய மொரார்ஜி தேசாயால் கொண்டுவரப்பட்டது.<br>3. லோக்சபா (ம) சட்டமன்ற பதவிக்காலம் 6 லிருந்து மீண்டும் 5 வருடமாக்கப்பட்டது.<br>4. குடியரசுத்தலைவர் அமைச்சரவையின் ஆலோசனையை ஒருமுறை மறுபரிசீலனைக்கு திருப்பி அனுப்பாலம், ஆனால் மறு பரிசீலனைக்குப்பின் அமைச்சரவையால் வழங்கப்படும் ஆலோசனையை கட்டாயம் ஏற்கவேண்டும்.<br>5. குடியரசுத்தலைவர் தேசிய நெருக்கடியை பிரகடனப்படுத்த கேபினட்/ அமைச்சரவையின் எழுத்துப்பூர்வ பரிந்துரை தேவை. கேபினட் எனும் வார்த்தை அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டது. |

www.Padasalai.Net

| | |
|---|---|
| | 6. தேசிய நெருக்கடியில் "உள்நாட்டு கலவரம்" எனும் வார்த்தை நீக்கப்பட்டு "ஆயுதமேந்திய கிளர்ச்சி" எனும் வார்த்தை சேர்க்கப்பட்டது.<br>7. சொத்துரிமை (விதி 31 மற்றும் 19 (F) அடிப்படை உரிமையிலிருந்து நீக்கப்பட்டு விதி 360A ன் கீழ் சாதாரண சட்ட உரிமையாக வைக்கப்பட்டது.<br>8. தேசிய நெருக்கடி நிலையின் போது கூட அடிப்படை உரிமைகளின் விதி 20 மற்றும் 21 -னை தற்காலிகமாக நிறுத்தி வைக்க கூடாது. |
| 52 வது 1985 | கப்சித்தாவல் தடைச்சட்டம் எனப்படும் 10 வது அட்டவணையை அரசியலமைப்பில் சேர்த்து, பாராளுமன்ற சட்டமன்ற MP., MLA.,க்களை கட்சி தாவவதிலிருந்து தடை செய்கிறது. |
| 61 வது 1988 | வாக்களிக்கும் வயது 21 லிருந்து18 ஆக குறைப்பு, இராஜிவ்காந்தி அரசால் இத்திருத்தம் செய்யப்பட்டது. இத்திருத்தம் நடைமுறைக்கு வந்த ஆண்டு : 1989. |
| 69 வது 1991 | டெல்லி யூனியன் பிரதேசம், தேசிய தலைநகர் பகுதியாக மாற்றப்பட்டது. டெல்லிக்கு 70 MLA உடைய சட்டப்பேரவை மற்றும் 7 அமைச்சர்களுடைய அமைச்சரவை உருவாக்கப்பட்டது |
| 71 வது 1992 | எட்டாவது அட்டவணையில் 16 17, 18 வது மொழிகளாக கொங்கனி, மணிப்பூரி, நேபாளி மொழிகள் சேர்க்கப்பட்டன. |
| 73 வது 1992 | 1. பஞ்சாயத்து ராஜ்ய சட்டம் எனப்படுகிறது.<br>2. பகுதி 11, மற்றும் 12 அட்டவணையை புதிதாக சேர்த்தது.<br>3. மூன்றடுக்கு பஞ்சாயத்து ராஜ்ய முறைக்கு அரசியலமைப்பு அந்தஸ்து வழங்கப்பட்டது.<br>4. பஞ்சாயத்திற்கு 29 பணிகளை வழங்குகிறது.<br>5. நரசிம்மராவ் அரசால் நிறைவேற்றப்பட்டது. |
| 74 வது 1992 | 1. நகர்பாலிகா சட்டம் எனப்படும் இது நரசிம்மராவ் அரசால் கொண்டுவரப்பட்டது.<br>2. இது மூன்றடுக்கு நகராட்சி அமைப்புகளுக்கு அரசியலமைப்பு அங்கீகாரம் தருகிறது.<br>3. அரசியலமைப்பில் புதிதாக பகுதி IX-A வையும் 12 வது அட்டவணையையும் சேர்த்தது.<br>4. 18 அடிப்படை பணிகளை நகராட்சிகளுக்கு வழங்கியுள்ளது. |
| 76 வது 1994 | தமிழ்நாடு இட ஒதுக்கீடு சட்டம் 1994 - னை 9 வது அட்டவணையில் சேர்த்தது. (தமிழ்நாட்டில் 69% இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது, இதன்மூலம் BC-30%, MBC-20%, SC-18%, ST-1%) |
| 77 வது 1995 | SC, ST பிரிவு மக்களுக்கு, அரசுப்பணிகளில் பதவி உயர்வில் இடஒதுக்கீடு |
| 81 வது 2000 | ஒரு வருடத்தில் நிரப்பப்படாத காலியிடங்களை அடுத்த ஆண்டிற்கு கொண்டு செல்லலாம். |
| 84 வது 2001 | 2026 வரை லோக்சபா MP எண்ணிக்கையை 545 ஆகவே வைத்திருப்பது (1991 சென்சஸ்படி) |
| 86 வது 2002 | 1. அடிப்படை உரிமைகளில் விதி 21-A வினைச் சேர்த்தது. இதன் மூலம் அனைவருக்கும் ஆரம்பக்கல்விபெறும் உரிமை வழங்கப்பட்டது.இது 6-14 வயது குழந்தைகளுக்கு கட்டாய இலவசக் கல்வி வழங்கும் உரிமையை தருகிறது. இதற்காக கட்டாய கல்வி உரிமைச் சட்டம் இயற்றப்பட்டது.<br>2. அரசு கொள்கையின் வழிகாட்டு நெறிமுறைகளுள் விதி45 னை திருத்தி 6 வயது வரை குழந்தைகளைப் பாதுகாத்து பேணுதலைக் கூறுகிறது.<br>3. அடிப்படை கடமைகளில் 11 வது அடிப்படை கடமையாக 6-14 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு கல்வி கற்கும் வாய்ப்பை ஏற்படுத்தி தருவது பெற்றோர் / |

www.Padasalai.Net

| | |
|---|---|
| | பாதுகாவலர் கடமை ஆகும். |
| 87 வது 2003 | 2026 வரை லோக்சபா MP எண்ணிக்கையை 545 ஆகவே வைத்திருப்பது(2001 சென்சஸ்படி) |
| 88 வது 2003 | சேவை வரிவிதித்தல் தொடர்பானது. |
| 89 வது 2003 | தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையர் (விதி 338), தேசிய பழங்க்குடியினர் ஆணையம் (விதி 338A), ஆகியவை இரண்டு தனித்தனி அமைப்பகளாக உருவானது. |
| 91 வது 2003 | 1. பிரதமர் உட்பட அனைத்தும் மத்திய அமைச்சர்களின் எண்ணிக்கை, லோக்சபா எம்.பி.க்களின் எண்ணிக்கையில் 15% அதிகமாக இருக்கக் கூடாது.<br>2. முதலமைச்சர் உட்பட அனைத்து அமைச்சர்களின் எண்ணிக்கை, மாநில சட்டப் பேரவை MLA-க்களின் எண்ணிக்கையில் 15% க்கு அதிகமாக இருக்கக் கூடாது. ஆனால் சட்ட மன்றத்தில் குறைந்த பட்சம் 12 அமைச்சர்கள் இருக்க வேண்டும்.<br>3. கட்சித்தாவலினால் தகுதியினை இழக்கும் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் எவரும் மத்திய அல்லது மாநில அமைச்சர்கள் ஆவதற்கான தகுதியையும் இழந்து விடுவர்<br>4. பத்தாவது அட்டவணையில், கட்சித்தாவல் தடைச்சட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு ஒரு கட்சியிலிருந்து 1/3 பங்கு உறுப்பினர்கள் பிரிந்து சென்றால் அது கட்சித்தாவலாக கருதப்படாது என்ற விதி நீக்கப்படுகிறது. இனி 1/3 பங்கு பிளவும் கடசித்தாவல் ஆகும். |
| 92 வது 2003 | 8 வது அட்டவணையில் 19,20,21 மற்றும் 22 வதாக போடோ,டோக்ரி, மைதிலி மற்றும் சந்தாலி மொழிகளைச் சேர்த்தது (மொத்தம் 22 மொழிகள் ஆனது) |
| 93 வது 2005 | SC, ST பிரிவினருடன் OBC, மக்களுக்கும், தனியார் கல்வி நிலையங்கள் உட்பட அனைத்து கல்வி நிலையங்களின் (சிறுபான்மையினர் கல்வி நிலையங்கள் தவிர) மாணவர் சேர்க்கையில் இட ஒதுக்கீடு வழங்க பாராளுமன்றம் சட்டம் இயற்றலாம். |
| 94 வது 2006 | பீகாருக்கு பதிலாக ஜார்க்கண்ட, சட்டிஸ்கர் மாநிலங்களுக்கு பழங்குடியினர் அமைச்சர் பதவி கட்டாயம் இருக்க வேண்டும் (தற்போது மத்தியப்பிரதேசம், ஒடிசா, ஜார்க்கண்ட, பீகாருக்கு பழங்குடியின் அமைச்சர் பதவி கட்டாயம்) |
| 95 வது 2009 | 1. லோக்சபா மற்றும் சட்டமன்றங்களின் SC, ST க்கான இடஒதுக்கீடு மேலும் 10 வருடங்களுக்கு அதாவது ஜனவரி 25, 2020 வரை தொடரும்.(விதி 334)<br>2. லோக்சபா மற்றும் சட்டமன்றங்களில் ஆங்கிலோ இந்தியர்களை நியமன உறுப்பினர்களாக நியமிப்பதும் 2020 வரை தொடரும். |
| 96 வது 2011 | ஒரியா மொழி " ஒடியா" என பெயர் மாற்றப்பட்டது. |
| 97 வது 2011 | கூட்டுறவு சங்கங்களை அமைக்க 19(1) C ல் அடிப்படை உரிமையும், விதி 43B ல் அரசு நெறிமுறை கொள்கையும் கொண்டுவரப்பட்டது. மேலும் புதிதாக பகுதி IX-B ல் கூட்டுறவு சங்கங்கள் எனும் பகுதி விதிகள் 243ZH - 243ZT வரை சேர்க்கப்பட்டுள்ளது. |
| 98 வது 2012 | ஹைதராபாத் - கர்நாடகா இடைப்பட்ட பகுதியின் முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகளை எடுக்க கர்நாடகா ஆளுநருக்கு தனிப்பட்ட வளர்ச்சி மன்றம் அமைக்க அதிகாரம் அளிக்கிறது. (விதி 371J) |
| 99 வது 2014 | உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகளின் நியமனம் குறித்து குடியரசுத்தலைவருக்கு பரிந்துரை வழங்க தேசிய நீதிபதிகள் நியமன ஆணையம் அமைக்க வழிவகை செய்கிறது |


http://www.trbtnpsc.com/2013/09/tnpsc-group-2-group-4-vao-exam-study.html

## 8. இந்திய அரசியலமைப்பின் முகவுரை

1. மக்களே அதிகாரத்தின் தோற்றுவாய் என குறிப்பிவது எது? **முகவுரை**
2. முகவுரையை அறிமுகப்படுத்தியவர் யார்? **ஜவஹர்லால் நேரு**
3. முகவுரையின் சிற்பி யார்? **ஜவஹர்லால் நேரு**
4. டிசம்பர் 13, 1946 ல் ஜவஹர்லால் நேரு அறிமுகப்படுத்திய **குறிக்கோள் தீர்மானமே முகவுரை** ஆனது.
5. முகவுரை இந்திய அரசியலமைப்பின் **குறிக்கோளினையும், ஆசைகளையும்** உள்ளடக்கியது.
6. முகவுரை நீதிக்கு அப்பாற்பட்டது அதாவது, நீதிமன்றங்களால் நடைமுறைப்படுத்த முடியாது.
7. முகவுரை ஒரே ஒரு முறை மட்டும் திருத்தப்பட்டுள்ளது. **42 வது திருத்தம், 1976 - ன்** மூலம் சமத்துவ, மதச்சார்பற்ற ஒருங்கிணைந்த, எனும் வார்த்தைகள் முகவுரையில் சேர்க்கப்பட்டன.
8. முதன் முதலில் முகவுரையை கொண்டிருந்தநாடு எது? **அமெரிக்கா**
9. இந்தியா அமெரிக்காவிலிருந்து முகவுரையை பின்பற்றியுள்ளது.
10. முகவுரை ஏற்றுக்கொள்ளப்பட்ட நாள் : **ஜனவரி 22, 1947.**
11. 1995 -ல் ஆவடி காங்கிரஸ் மாநாட்டில் சமதர்ம சமுதாயம் இந்தியாவின் கொள்கையாக ஆனது.

### முகவுரை

www.Padasalai.Net

இந்திய மக்களாகிய நாம், இந்தியாவை ஒரு இறையாண்மை மிக்க, சமத்துவ, மதச்சார்பற்ற, மக்களாட்சிக் குடியரசாக அமைக்கவும் அதன் குடிமக்கள் அனைவருக்கும், சமுதாய அரசியல் நீதியும், சிந்தனையில், சிந்தனை வெளிப்பாட்டில் நம்பிக்கையில் பற்றார்வத்தில் (ம) வழிபாட்டில் சுதந்திரம் தகுதி நிலையில் மற்றும் வாய்ப்பில் சமத்துவமும், உறுதியாகக் கிடைக்கச் செய்யவும், தனி மனிதனின் மாண்புக்கும், நாட்டின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் உறுதியளிக்கும் சகோதர மனப்பான்மையை அவர்களிடையே வளர்க்கவும், விழுமிய முறைமையுடன் உறுதி பூண்டு 1949, நவம்பர் 26 ஆம் நாளாகிய இன்று, நம்முடைய அரசியல் நிர்ணய சபையில், இவ்வரசியலமைப்பை ஏற்று, சட்டமாக இயற்றி, நமக்கு நாமே வழங்குகிறோம்.

## 9. இந்திய ஒன்றியமும் அதன் பகுதிகளும் (பகுதி-1)

- ✓ இந்தியா அல்லது பாரதம் என்பது மாநிலங்களின் ஒன்றியமாகும் எனும் விதி : விதி 1
- ✓ விதி 1ன் படி இந்தியாவின் பிரதேசம் எவற்றை உள்ளடக்கியது?
    1. 29 மாநிலங்கள்
    2. 7 யூனியன் பிரதேசங்கள்
    3. எப்போதாவது இந்தியாவால் கைப்பற்றப்படும் பிரதேசம் எதுவும்
- ✓ விதி 2: பாராளுமன்றம், இந்தியப் பிரதேசத்துடன் புதிய மாநிலங்களை சேர்க்கவும், உருவாக்கவும் அதிகாரம் பெற்றுள்ளது.

- ✓ விதி 3 : ஏற்கனவே இருக்கும் இந்திய மாநிலங்களின் எல்லை, பரப்பு, பெயர் ஆகியவற்றினை பாராளுமன்றம் மாற்றியமைக்கலாம்.
- ✓ இம்மசோதாவிற்கு குடியரசுத் தலைவரின் முன் அனுமதி தேவை.
- ✓ சம்பந்தப்பட்ட மாநிலத்தின் சம்மதமின்றியே பாராளுமன்றம் மாற்றியமைக்கலாம்.
- ✓ எனவே தான் இந்தியா சிதைக்கக்கூடிய மாநிலங்களைக் கொண்ட சிதைக்க முடியாத யூனியனாகும் விளங்குகிறது.
- ✓ ஆனால் அமெரிக்கா சிதைக்கமுடியாத மாநிலங்களைக் கொண்ட சிதைக்க முடியாத யூனியனாகும்.
- ✓ விதி 4 : முதலாவது மற்றும் நான்காவது அட்டவணையில் திருத்தங்கள் செய்வதற்காக விதி 2 மற்றும் 3 ன் கீழ் இயற்றப்படும் சட்டங்களின் மற்றும் இதர விவரங்கள் பற்றியது
- ✓ 1960 -ல் பெருபாரி யூனியன் வழக்கு:
- ✓ மேற்கு வங்கத்தின் ஒரு பகுதியான பெருபாரி யூனியனை பாகிஸ்தானுக்கு வழங்க முற்பட்ட நேர்வில், உச்சநீதிமன்றம், மாநிலத்தின் ஒரு பகுதியை வேறு நாட்டிற்கு வழங்க விதி 368 ன் கீழ் அரசியலமைப்பு திருத்தம் தேவை என்றது.
- ✓ பெருபாரி யூனியன் எத்திருத்தத்தின் மூலம் பாகிஸ்தானுக்கு வழங்கப்பட்டது?

  **9 -வது திருத்தம், 1960**

## 10. மாநிலங்களின் மறுசீரமைப்பு

- ✓ இந்தியச் சுதந்திரச் சட்டம், 1947 ன் படி 549 சுதேச சமஸ்தானங்கள் சுதந்திரத்தின் போது இந்தியாவுடன் இணைந்தன.
- ✓ அதன்பின் இந்தியாவுடன் இணையாமலிருந்த
  1. ஹைதராபாத் - ராணுவ நடவடிக்கை மூலம்
  2. ஜீனாகத் - மக்கள் கருத்துக்கணிப்பின் மூலமும்
  3. காஷ்மீர் - இணைப்புறுதிப்பத்திரம் வழியாகவும் இந்தியாவுடன் இந்தியாவுடன் இணைக்கப்பட்டன.

### ➢ மொழிவாரி மாநில கோரிக்கை:

1. **<u>S.K. தார் கமிட்டி:</u>** மொழிவாரி மாநிலங்கள் உருவாக்க முதன் முதலில் உருவாக்கப்பட்ட கமிட்டி இதுவாகும்.(ஜீன்,1948). இதன் அறிக்கை டிசம்பர் 1948 -ல் வழங்கப்பட்டது. மொழியின் அடிப்படையில் மாநிலங்கள் பிரிப்பதை இது ஏற்கவில்லை.
2. <u>JVP கமிட்டி (ஜே.வி.பி.கமிட்டி) (1948)</u>

   J - ஜவஹர்லால் நேரு

   V - வல்லபாய் பட்டேல்

   P - பட்டாபி சீதாராமையா

   ஜெய்ப்பூரில் காங்கிரஸ் கட்சி அமைத்த JVP கமிட்டியும் மொழிவாரி மாநிலக் கோரிக்கையை ஏற்கவில்லை.

www.Padasalai.Net

3. **தனி ஆந்திரா கோரிக்கை (1953)** : தெலுக்கு பேசும் பகுதிகளை மதராஸிலிருந்து பிரிக்கக் கோரி பொட்டி ஸ்ரீராமுலு உண்ணா நோனயிருந்து 56 வது நாள் இறந்தார். எனவே 1953 -ல் ஆந்திரா முதல் மொழிவாரி மாநிலமாக உருவாக்கப்பட்டது.
4. **மாநில மறுசீரமைப்புக்குழு:** இந்தியா முழுவதும் மொழிவாரி மாநிலங்களின் உருவாக்கத்தை ஆராய மாநில மறுசீரமைப்பு குழு அமைக்கப்பட்டது.
   தலைவர் : பாசல் அலி
   உறுப்பினர் : 1.ஹிருதயநாத்குன்ஸ்ரு
   2. கே.எம். பணிக்கர்
   இதன் அறிக்கை 1955 -ல் வழங்கப்பட்டது. மொழிவாரி மாநிலங்கள் உருவாக்கும் கோரிக்கையை ஏற்றது. ஆனால் "**ஒரு மொழிக்கு ஒரு மாநிலம்**" என்ற கோரிக்கையை நிராகரித்தது.
5. இதனடிப்படையில் **மாநில மறுசீரமைப்புச் சட்டம் நவம்பர் 1, 1956** -ல் இயற்றப்பட்டது. இதற்கு **7 வது திருத்தம் 1956-ன்** மூலம் அரசியலமைப்பு அந்தஸ்து வழங்கப்பட்டது. இதன் மூலம் நவம்பர் 1, 1956 -ல் இந்தியாவில் 14 மாநிலங்கள் மற்றும் 6 யூனியன் பிரதேசங்கள் உருவாக்கப்பட்டன.

## ➢ புதிய மாநிலங்களின் தோற்றம்

1953 : இந்தியாவின் முதல் மொழிவாரி மாநிலமாக உருவாக்கப்பட்ட மாநிலம் எது?
**ஆந்திரப்பிரதேசம்**

1956 : நவ 1, 1956 -ல் மாநில மறுசீரமைப்புச் சட்டம், 1956-ன் மூலம் உருவாக்கப்பட்டவை 14 மாநிலங்கள் மற்றும் 6 யூனியன் பிரதேசங்கள்.

www.Padasalai.Net

1960 : பம்பாய் பிரிக்கப்பட்டு மகாராஷ்டிரா மற்றும் புதிதாக குஜராத் மாநிலம் (15 வது) உருவாக்கம்.

1961 : தாத்ரா - நாகர்வேலி யூனியன் பிரதேசமானது (1954 -ல் போர்ச்சுகீயரிடமிருந்து விடுவிக்கப்பட்டது) 10 வது திருத்தம், 1961

1962 : கோவா, டாமன், டையூ யூனியன் பிரடதேசமானது (12 வது திருத்தம், 1961) (இவை போர்ச்சுகீசியரிடமிருந்து 1961 -ல் விடுவிக்கப்பட்டது

1962 : பாண்டிச்சேரி யூனியன் பிரதேசம் ஆனது (14 வது திருத்தம், 1962) (பாண்டிச்சேரி, 1954 ல் பிரஞ்சுகாரர்களிடமிருந்து விடுவிக்கப்பட்டது)

1963 : நாகலாந்து மாநிலம் புதிதாக தோற்றுவிக்கப்பட்டது (16 வது மாநிலம்)

1966 : பஞ்சாப் பிரிக்கப்பட்டு புதியதாக ஹரியானா மாநிலம் (17 வது) மற்றும் சண்டிகர் யூனியன் பிரதேசம் உருவாக்கப்பட்டது.

1971 : ஹிமாச்சலப் பிரதேசம், யூனியன் பிரதேச அந்தஸ்திலிருந்து தனி மாநிலமாக உருவாக்கப்பட்டது (18 வது)

1972 : மணிப்பூர் - 19 வது
திரிபுரா - 20 வது
மேகாலயா - 21 வது மாநிலங்களாக தோற்றுவிக்கப்பட்டன.

1975 : சிக்கிம் - 22 வது மாநிலமாக உருவாக்கப்பட்டது.

1987 : மிசோரம் - 23 வது அருணாசலப்பிரதேசம் - 24 வது கோவா - 25 வது மாநிலமாக உருவாக்கப்பட்டது.

2000 : சட்டிஸ்கர் - 26 வது (மத்தியப்பிரதேசத்திலிருந்து) - நவம்பர் 1,2000
உத்தரகண்ட - 27 வது ( மத்தியப்பிதேசத்திலிருந்து) - நவம்பர் 9,2000

ஜர்ர்க்கண்ட - 28 வது (பீகாரிலிருந்து) - நவம்பர் 15,2000
2014 : தெலுங்கானா (ஆந்திரப்பிரதேசத்திலிருந்து பிரிந்து 29 - வது மாநிலமாக ஜீன் 2,2014 உதயமானது.)

# 11. தமிழக மாவட்டங்களின் தோற்றம்

## தமிழக மாவட்டங்களின் தோற்றம்:

1956 : கன்னியாகுமரி
1965 : தர்மபுரி(சேலத்திலிருந்து)
1968 : காஞ்சிபுரம்
1974 : புதுக்கோட்டை (தஞ்சை, திருச்சியிலிருந்து)
1979 : ஈரோடு (கோவையிலிருந்து)
1985 : சிவகங்கை மற்றும் விருதுநகர் (இராமநாதபுரத்திலிருந்து)
1985 : திண்டுக்கல் (மதுரையிலிருந்து)
1986 : தூத்துக்குடி (திருநெல்வேலியிலிருந்து)
1989 : வட ஆற்காடு பிரிக்கப்பட்டு,வேலூர் திருவண்ணாமலை உருவாக்கம்.
1991 : நாகப்பட்டினம் (தஞ்சையிலிருந்து)
1993 : தென் ஆற்காடு பிரிக்கப்பட்டு, கடலூர் (ம) விழுப்புரம் தோற்றம்
1995 : கரூர், பெரம்பலூர் (திருச்சி பிரிக்கப்பட்டு)
1996 : நாமக்கல்
1996 : திருவாரூர்
1996 : தேனி (மதுரையிலிருந்து)
1996 : திருவள்ளூர் (செங்கை எம்.ஜிஆர் மாவட்டம் பிரிக்கப்பட்டு)
2004 : கிருஷ்ணகிரி (தர்மபுரியிலிருந்து)
2007 : அரியலூர் (பெரம்பலூரிலிருந்து) (முன்னர் 2001 ல் பிரிக்கப்பட்டு 2002 ல் மீண்டும் சேர்க்கப்பட்டது)
2008 : திருப்பூர்:32 வது (ம) கடைசி மாவட்டம்: (கோவை, ஈரோடு மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு)

## பெயர் மாற்றம்:

ஐக்கிய மாகாணம் : உத்திபிரப்பிரதேசம் 1950
மதராஸ் மாகாணம் : தமிழ்நாடு 1969
மைசூர் மாகாணம் : கர்நாடகா 1973
டெல்லி - டெல்லி தேசிய தலைநகர் : 1992
மெட்ராஸ் : சென்னை 1996
உத்தராஞ்சல் : உத்தர்கண்ட் 2007
ஒரிசா : ஒடிசா 2011 (96 வது திருத்தம், 2011)
பாண்டிச்சேரி : புதுச்சேரி : 2011

www.Padasalai.Net

## 12 குடியுரிமை

1. இந்தியாவில் குடியுரிமை அரசியலைப்பின் எப்பகுதியில் வழங்கப்பட்டுள்ளது?
   **பகுதி 2 ல் விதி 5 - 11 வரை**
2. இந்தியாவில் எவ்வகை குடியுரிமை நடைமுறையிலுள்ளது?
   **ஒற்றைக்குடியுரிமை**
3. இரட்டைக் குடியுரிமை கொண்ட நாடுகள்: **அமெரிக்கா, சுவிட்சர்லாந்து**
4. ஜனவரி 26, 1950 க்கு முன் குடியுரிமை பற்றிய விதி 5-11 விளக்குகிறது.
5. விதி 5 : அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தபோது இந்தியாவில் வசித்தவர்களின் குடியுரிமை பற்றியது
6. விதி 6 :: பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்கு குடியேறியவர்களின் குடியுரிமை.
7. விதி 7 : மார்ச் 1, 1947 க்குப் பிறகு பாகிஸ்தானுக்கு குடியேறி பின்னர் இந்தியாவிற்கு திரும்பிவர்களின் குடியுரிமை
8. விதி 8 : இந்தியாவிற்கு வெளியே வசிக்கும் இந்திய வம்சாவளியினரின் குடியுரிமை.
9. விதி 9 : தானாக வெளிநாட்டுக் குடியுரிமை பெறுவோரின் இந்தியக் குடியுரிமையை நீக்குதல்.
10. விதி 10 : ஒருவரின் குடியுரிமை தொடர்ந்து இருப்பது பாராளுமன்றத்தின் சட்டங்களுக்கு உட்பட்டதாக இருக்கும்
11. விதி 11: குடியுரிமை வழங்கவும் நீக்கவும் பாராளுமன்றம் சட்டமியற்றலாம்.
12. குடியுரிமைச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு **1955.**
13. குடியுரிமை (திருத்தச்) சட்டம் இயற்றப்பட்ட ஆண்டுகள்: **1986,1992,2003,2005.**
14. குடியுரிமை சட்டம் - 1955: **காமன்வெல்த் குடியுரிமை வழங்கியது**.
15. காமன்வெல்த் குடியுரிமையை நீக்கிய சட்டம்: **குடியுரிமை (திருத்தம்) சட்டம்: 2003**
16. இந்திய குடியுரிமைச் சட்டம் 1955-ன் படி குடியுரிமையை எத்தனை வழிகளில் பெறலாம்?
    **ஐந்து வழிகளில்**

I. **<u>பிறப்பின் மூலம்:</u>**
ஜனவரி 26, 1950 க்குப் பிறகு இந்தியாவில் பிறந்தவர்கள்; பெற்றோர் இருவரும் இந்திய குடிமக்களாக இருக்க வேண்டும்.

II. **<u>பரம்பரையின் மூலம்:</u>**
இந்தியாவிற்கு வெளியில் பிறந்தவர்கள்; தந்தை/தாய் - இந்திய குடிமகனாக இருக்க வேண்டும்

III. **<u>பதிவின் மூலம்:</u>**
பதிவிற்கு முன் 7 வருடம் இந்தியாவில் வசித்தவர்; இந்திய குடிமகன் / குடிமகளை மணம் செய்து 7 ஆண்டுகள் இந்தியாவில் வசிப்போர்

IV. **<u>குடிமக்களாக ஏற்றுக் கொள்வதன் மூலம்:</u>**
இந்தியர் ஒருவர் எந்நாட்டில் இம்முறை மூலம் அந்நாட்டின் குடிமக்களாக ஏற்றுக் கொள்ளப்பட மறுக்கப்படுகிறார்களோ,அந்நாட்டின் குடிமக்களாக இல்லாதவர்களுக்கு; விண்ணப்பிக்கும் முன் 12 மாதம் இந்தியாவிலிருந்திருக்க வேண்டும்.

www.Padasalai.Net

V. **<u>பிரதேசங்களின் ஒன்றிணைப்பின் மூலம்</u>**:
மற்ற நாடுகளின் பிரதேசங்கள் இந்தியாவின் ஒரு பகுதியாக இணைக்கப்படும் போது அப்பகுதி மக்கள் இந்திய குடிமக்களாக அறிவிக்கப்படுவர்.

17. இந்தியக் குடியுரிமைச் சட்டம், 1955 -ன் கீழ் குடியுரிமையை **மூன்று வழிகளில் நீக்கலாம்**.
   I. இந்தியக் குடியுரிமையை ஒருவர்தானாக முன்வந்து துறத்தல்.
   II. இந்தியக்குடிமகன் ஒருவர் அரசின் அனுமதியின்றி தானாகவே மற்ற நாட்டு குடியுரிமையை பெறும் போது அவரது குடியுரிமை முடிவுக்கு கொண்டு வரப்படும்.
   III. தவறாக,மோசடி வழிகளில் பெற்ற குடியுரிமையினை சட்டப்படி நீக்கம் செய்தல்.

18. இந்திய வம்சாவளியினர், வெளிநாடு வாழ் இந்தியர், வெளிநாடு வாழ் இந்தியக்குடிமக்கள்:

## 13. அடிப்படை உரிமைகள்

- ✓ இந்திய அரசியலமைப்பின் பகுதி - III ல் விதி 12 - 35 ல் வழங்கப்பட்டுள்ளது.
- ✓ அடிப்படை உரிமைகள் எங்கிருந்து பின்பற்றப்பட்டது?
- ✓ அமெரிக்கா அரசியலமைப்பிலிருந்து பின்பற்றப்பட்டது
- ✓ இந்தியாவின் மகாசாசனம் எனப்படுவது எது? **பகுதி 3 அடிப்படை உரிமைகள்**
- ✓ அடிப்படை உரிமையின் நோக்கம்:
    1) தனிமனித சுதந்திரம் மற்றும் சமத்துவத்தை நிலைநாட்டுகிறது.
    2) குடிமக்களின் அரசியல் சுதந்திரத்தை நிலைநாட்டுகிறது
- ✓ அடிப்படை உரிமைகள் நீதிமன்றத்தால் நடை முறைப்படுத்தப்படக் கூடியவை.
- ✓ ஆரம்பத்தில் 7 வகை இருந்தன, தற்போது 6 வகை அடிப்படை உரிமைகள் உள்ளன
    I. சமத்துவ உரிமைக் விதி: 14 - 18
    II. சுதந்திர உரிமை விதி: 19 -22
    III. சுரண்டலுக்கெதிரான உரிமை விதி: 23 & 24
    IV. சமய/ மத சுதந்திர உரிமை விதி 25 - 28
    V. கல்வி (ம) பண்பாட்டு உரிமைகள் விதி :29 - 30
    VI. சொத்துரிமை விதி 31
    VII. அரசியலமைப்புச் சட்டபடி பரிகாரம் தேடும் உரிமை விதி 32
- ✓ மேற்கண்டவற்றுள், சொத்துரிமை (விதி 31) அடிப்படை உரிமைகளிலிருந்து நீக்கப்பட்டு, சாதாரண சட்ட உரிமையாக பகுதி 8 -ல், விதி 300A ல் வைக்கப்பட்டுள்ளது.
- ✓ சொத்துரிமையை அடிப்படை உரிமைகளிலிருந்து நீக்கிய திருத்தம் எது?

    **42 வது திருத்தம், 1978**

### ➢ அடிப்படை உரிமைகளின் விதிகள்: விதி 12 - 35

விதி : 12
- ○ பகுதி 3 ல் குறிப்பிடப்படும் "அரசு" எனும் வார்த்தையை வரையறுக்கிறது.

விதி : 13 நீதி மறு ஆய்வு / சட்ட மறுபரிசீலனை கோட்பாடு பற்றியது. இதன்படி அடிப்படை உரிமைகளுக்கு முரணாக இயற்றப்படும் எந்த ஒரு சட்டமும் செல்லாது என அறிவித்தல். இவ்வதிகாரம்,


http://www.trbtnpsc.com/2013/09/tnpsc-group-2-group-4-vao-exam-study.html

- விதி 32 - ன் கீழ் - உச்சநீதிமன்றத்திற்கு,
- விதி 226 - ன் கீழ் - உயர்நீதிமன்றங்களுக்கும் உண்டு.

## ➢ சமத்துவ உரிமை விதி 14 - 18:

விதி 14 : சட்டத்தின் முன் அனைவரும் சமம் - **பிரிட்டிஷ் கோட்பாடு சட்டம்** அனைவருக்கும் சம பாதுகாப்பு அளிக்கும் - **அமெரிக்க கோட்பாடு.**

## ➢ சட்டத்தின் ஆட்சி :

- சட்டத்தின் ஆட்சி எனும் கோட்பாட்டினை வலியுறுத்தும் அரசியலமைப்பின் ஷரத்து:
  **ஷரத்து 14.**
- சட்டத்தின் ஆட்சி எனும் கோட்பாட்டினை வழங்கியவர் யார்?
  **ஏ.வி.டைசி எனும் ஆங்கிலேயர்**
- சட்டத்தின் ஆட்சி என்பது
  - I. எந்தவொரு மனிதனும் சட்டத்தை மீறிய குற்றத்திற்காக மட்டுமே தண்டிக்கப்பட வேண்டும்
  - II. சட்டத்தின் முன் அனைவரும் சமம்
  - III. அரசியலமைப்புச் சட்டமே ஒரு நாட்டின் முதன்மையான சட்டமாகும்.
- சட்டத்தின் ஆட்சி எனும் கோட்பாட்டினை வழங்கிய நாடு எது? **இங்கிலாந்து.**

www.Padasalai.Net

## ➢ 25 வது அரசியலமைப்பு தித்தம்,1971:

- DPSP -ன் விதி 39 (b) (ம) 39 (c) யை நடைமுறைப்படுத்த இயற்றப்படும் எந்த ஒரு சட்டமும், அவை விதி 14, 19, 31 ஐ மீறுகிறது என செல்லாத்தாக்க முடியாது.
- **<u>விதி 15 :</u>** சாதி, மதம், இனம், பாலினம், பிறப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் மட்டும் குடிமக்களை பாரபட்சமாக நடத்துவதைத் தடை செய்தல்.
- விதிவிலக்கு : சமூக பொருளாதார, கல்வியில் பின்தங்கிய சமூகத்தினருக்கு இட ஒதுக்கீடு அளிக்கலாம்

## ➢ 93 வது திருத்தம், 2005 :

- SC, ST பிரிவினர் மட்டுமின்றி, OBC இனத்தவருக்கும் தனியார் கல்வி நிலையங்கள் உட்பட அனைத்து உயர்கல்வி நிலையிங்களில் (சிறுபான்மையினர் கல்வி நிலையங்கள் தவிர) மாணவர் சேர்க்கையில் இட ஒதுக்கீடு வழங்காலம்.
- இதனை நடைமுறைப்படுத்த (Central Educatilonal institution (Reservation in Asmission) இயற்றப்பட்டது. இது OBC Act எனப்படுகிறது. இது OBC க்களுக்கு 27% இட ஒத்துக்கீடு வழங்குகிறது.

**விதி 16** : பொது வேலை வாய்ப்பில் அனைவருக்கும் சமவாய்ப்பு சாதி, மத, இன பாலின, பிறப்பிட, வசிப்பிட அடிப்படையில் மட்டும், பொது வேலை வாய்ப்பில் குடிமக்களை பாகுபடுத்தக்கூடாது.

**விதிவிலக்கு:** சமூக, பொருளாதார நலிவடைந்த பிரிவினருக்கு இட ஒதுக்கீடு அளிக்கலாம்.

## ➢ மண்டல் கமிஷன்:

- ⇔ 1979 ல் மொரார்ஜி தேசாய் அரசினால் நியமிக்கப்பட்ட இரண்டாவது பிற்படுத்தப்பட்ட நல ஆனையத்தின் தலைவர். **B.P.மண்டல்**
- ⇔ பிற்படுத்தப்பட்டோரில் ஆணையம் எவ்விதிப்படி அமைக்கப்படுகிறது? **விதி 340**
- ⇔ முதல் பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் யார் தலையில் அமைக்கப்பட்டது? **1953 -ல் க.்கா கலேலகர் (நேரு அரசினால்)**
- ⇔ மண்டல் கமிஷனின் அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட வருடம்: **1980**
- ⇔ முதன்முதலில் பிற்படுத்தப்பட்டோருக்கு (OBC) இட ஒதுக்கீட்டினை பரிந்துரைத்த கமிஷன். **மண்டல் கமிஷன்**
- ⇔ மண்டல் கமிஷன் பரிந்துரையை ஏற்று, OBC க்களுக்கு 27% இட ஒதுக்கீடு வழங்கியவர். **V.P.சிங் - 1990**
- ⇔ மண்டல் வழக்கு என அழைக்கப்படுவது எது? **இந்திரா சகானி எதிர் யூனியன் ஆப் இந்தியா வழக்கு, 1992**
- ⇔ மண்டல் வழக்கில் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு யாது?
    - I. Creamy layer க்கு இட ஒதுக்கீடு கிடையாது
    - II. பதவி உயர்வில் இட ஒதுக்கீடு கிடையது
    - III. மொத்த இட ஒதுக்கீடு 50% க்கு மீறக்கூடாது
    - IV. Backlog Vacancies - ஐ 50% க்கு மிகாமல் அடுத்த வருடத்திற்கு கொண்டு செல்லலாம்
    - V. பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காக ஒரு நிரந்தர ஆணையம் தேவை
- ⇔ மண்டல் வழக்கின் தீர்ப்பின் படி, creamy layer -ஐ வரையறுக்க அமைக்கப்பட்ட கமிட்டியின் பெயர். **ராம்நந்தான் கமிட்டி**
- ⇔ நிரந்தரமான தேசிய பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் அமைக்கப்பட்ட ஆண்டு : **1993**
- ⇔ மத்திய அரசின் இட ஒதுக்கிடு சதவீதம்.
  - OBC : 27%
  - SC : 15%
  - ST : 7.5%
- ⇔ தமிழ்நாடு இட ஒதுக்கீட்டுச் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு : **1994**
- ⇔ இச்சட்டம் 69% இட ஒதுக்கீட்டினை அளிக்கிறது
  - OBC : 30%
  - MBC : 20%
  - SC : 15%
  - ST : 1%
  - MAARRUTHIRANAALIKAL : 3%
  - THAMIL VAYI PAYINROOR : 20%
- ⇔ தமிழ்நாடு இட ஒதுக்கீட்டுச் சட்டத்திற்கு சட்ட மறு பரிசீலனையிலிருந்து விலக்களித்த அரசியலமைப்புத்திருத்தம் - **76 வது திருத்தம், 1994** (9 வது அட்டவனையில் சேர்க்கப்பட்டது.)

## விதி 17: தீண்டாமை ஒழிப்பு:

- ⇔ தீண்டாமையை எவ்வடிவத்திலும் செயல்படுத்தக்கூடாது; தீண்டாமை ஒரு தண்டனைக்குரிய குற்றமாகும்.
- ⇔ இதற்காக தீண்டாமை (குற்றங்கள்) சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு: 1955.

www.Padasalai.Net

- இது 1976-ல் திருத்தப்பட்டு, குடிமக்களின் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1995 என பெயர் மாற்றப்பட்டது.
- இச்சட்டப்படி தீண்டாமை குற்றத்திற்கு:
  - I. 6 மாத சிறை (அ) 500 அபராதம் (அ) இரண்டும்
  - II. பாராளுமன்ற, சட்டமன்ற தேர்தலில் போட்டியிட முடியாது.
- இது தனிநபர்களுக்கு எதிராக வழங்கப்படக்கூடியதாகும்.
- விதி 17 ஒரு முழுமையான உரிமையாகும்
- "தீண்டாமை" எனும் வார்த்தை அரசியலமைப்பில் எவ்விடத்திலும் சொல்லப்படவில்லை (முதன் முதலில் மைசூர் உயர்நீதிமன்றம் வரையறை அளித்தது).

**விதி - 18 கௌரவ பட்டங்களின் ஒழிப்பு:**

- கல்வி மற்றும் ராணுவம் தவிர இதர துறைகளில் அரசு கௌரவ பட்டங்களை வழங்கக் கூடாது இவ்விதியை மீறுதலுக்கு எவ்வித தண்டனையும் அரசியலமைப்பில் குறிப்பிடவில்லை.
- பாராத ரத்னா மற்றும் பத்ம விருதுகள் உள்ளிட்டவை வழங்குவது தவறில்லை என உச்சநீதிமன்றம் எவ்வழக்கில் தீர்பளித்தது? - பாலாஜி ராகவன் எதிர் இந்திய யூனியன் வழக்கு,1996.

## ➢ சுதந்திர உரிமை (விதி 19 - 22 வரை)

**விதி 19:** ஆறுவகை அடிப்படை சுதந்திரங்களை வழங்குகிறது. இவை தனிநபர் சுதந்திரங்களாகும்.

முதலில் 7 இருந்தது. தற்போது 6 வகை அடிப்படை சுதந்திரங்கள் உள்ளன.

www.Padasalai.Net

**விதி 19 (1) (a) :** பேச்சுரிமை (ம) கருத்துக்களை வெளியிடும் உரிமை

**விதி 19 (1) (b) :** ஆயுதங்களின்றி அமைதியாக கூடுவதற்கான சுதந்திரம்

**விதி 19 (1) (c) :** கழகங்கள், சங்கங்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் அமைப்பதற்கான சுதந்திரம்

இதில் கூட்டுறவு சங்கங்கள் எனும் வார்த்தை 97 வது திருத்தம், 2011 மூலம் சேர்க்கப்பட்டது.

**விதி 19 (1) (d) :** இந்தியா முழுவதும் / எப்பகுதிக்கும் சென்றுவர சுதந்திரம்

**விதி 19 (1) (e) :** இந்தியாவின் எப்பகுதியிலும் தங்கி வாழும் உரிமை

**விதி 19 (1) (g) :** எவ்வித தொழில், பணி, வணிகம், / வியாபாரம் செய்யும் உரிமை

| |
|---|
| மேற்கண்ட விதிகளுடன் இருந்த விதி 19 (1) (f) - சொத்துரிமை, 44- வது அரசியலமைப்பு திருத்தம், 1978-ன் மூலம் நீக்கப்பட்டு - விதி 300 A வில் சாதாரண சட்ட உரிமையாக்கப்பட்டுள்ளது. |

**விதி 20 :** குற்றங்களுக்காகத் தண்டிக்கப்படுவதிலிருந்து பாதுகாப்பு. இவ்விதி மூன்று வகையான தண்டனைக்கெதிரான பாதுகாப்பினை அளிக்கிறது.

- I. EX-post facto legislation- கடந்த கால நிகழ்ச்சிகளுக்கும் பொருந்தும் சட்டம். குற்றவியல் வழக்குகளில் முன்தேதியிட்டு சட்டமியற்றி அதன் மூலம் தண்டிக்கக்கூடாது.
- II. Double Jeopardy - இரட்டை இடர் (அ) இரட்டை தண்டனை ஒரு குற்றத்திறகாக ஒருவர் ஒருமுறை மட்டுமே தண்டிக்கப்பட வேண்டும்.

III. No self- Incriminarion - தன்னைத் தானே குற்றஞ்சாட்டல். குற்றஞ்சாட்டப்பட்ட நபரை தனக்கு எதிராக சாட்சி சொல்லும் படி அவரை கட்டாயப்படுத்தக்கூடாது.

**விதி 21: வாழும் உரிமை மற்றும் தனிமனித சுதந்திரம்**

- சட்டத்தால் உண்டாக்கப்பட்ட நடைமுறைகளின் படி அல்லாமல், எவரிடமிருந்து வாழும் உரிமையையும், தனி மனிதன் சுதந்திரத்தையும் பிரிக்க இயலாது.
- இருமுறைகள்
  - I. சட்டத்தால் உண்டாக்கப்பட்ட நடைமுறை - இந்திய கோட்பாடு
  - II. சட்டத்தின் உரிய செயல்முறை - அமெரிக்க கோட்பாடு

**விதி 21A : கல்வி பெறும் உரிமை**

- 6 - 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு அரசு இலவச கட்டாய கல்வி வழங்க வேண்டும். இது ஆரம்பக்கல்வி பெறும் உரிமை மட்டுமே. இவ்வுரிமை 86 வது திருத்தம் - 2002-ன் மூலம் சேர்க்கப்பட்டது.
- இச்சட்டத்தின்படியே, கல்வி பெறும் உரிமைச்சட்டம், 2009 இயற்றப்பட்டது. இச்சட்டம் ஏப்ரல் 1,2010 அன்று நடைமுறைக்கு வந்தது.

**விதி 22 : சில சூழலில், கைது மற்றும் சிறைக்காவலில் வைப்பதற்கு எதிரான பாதுகாப்பு.**

I. கைது செய்வதற்கு சரியான காரணம் தெரிவிக்க வேண்டும்.
II. 24 மணி நேரத்திற்குள் நீதிபதி முன் ஆஜர்படுத்த வேண்டும்.
III. நீதிபதி வழங்கும் காலக்கெடுவிற்குமேல் காவலை நீட்டிக்க முடியாது

**தடுப்புக்காவல் சட்டங்கள்:**

- தடுப்புக்காவல் சட்டங்களை யார் இயற்றலாம்? **பாராளுமன்றமும், சட்டமன்றமும்**
- அமெரிக்காவில் தடுப்புக்காவல் சட்டங்கள் இல்லை
- தடுப்புக்காவல் சட்டங்களை கொண்டுள்ள பெரிய ஜனநாயக நாடு : **இந்தியா**

www.Padasalai.Net

**இந்தியாவின் தடுப்பு காவல் சட்டங்கள்:**

1. தடுப்புகாவல் சட்டம் 1950 (1969-ல் முடிவுக்கு வந்தது)
2. MISA சட்டம் 1971 (1978-ல் நீக்கப்பட்டது)
3. COFEPOSA சட்டம், 1974
4. தேசிய பாதுகாப்புச் சட்டம், 1980
5. TADA சட்டம் 1985 (1995-ல் நீக்கப்பட்டது)
6. POTA சட்டம் 2002 (2004 ல் நீக்கப்பட்டது)

## ➢ சுரண்டலுக்கெதிரான உரிமை (விதி 23 மற்றும் 24)

**விதி 23 :** மனிதர்களை சட்ட விரோத இழி தொழில் வாணிபம் செய்தலை தடுத்தல் கட்டாய தொழிலாளர் முறையை (பேகார்முறை) ஒழித்தல்.
இதற்காக Immoral Traffic Act 1956 இயற்றப்படது.

I. கொத்தடிமை தொழிலாளர் ஒழிப்புச் சட்டம் 1976 (இந்திராகாந்தி)
II. சமவேலைக்கு சம ஊதியச் சட்டம், 1976
III. ஒப்பந்த தொழிலாளர் சட்டம்,1970
IV. குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948 இயற்றப்பட்டன.

- இவ்விதிப்படி (விதி 23) அடிமை, தேவதாசி, விபச்சாரம், பேகார் கட்டாய தொழிலாளர், கொத்தடிமை, மனிதர்களை விற்பனை செய்தல், பிச்சை எடுக்க வைத்தல் போன்றவை தடை செய்யப்பட்ட செயலாகும்.

**விதி 24 : குழந்தை தொழிலாளர் முறையை தடைசெயதல்**

- 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளை பணியமர்த்த தடை, அதாவது குழந்தை தொழிலாளர் முறையை தடை செய்தல்
- குழந்தை தொழிலாளர் (தடுப்பு (ம) முறைப்படுத்துதல்) சட்டம், 1986
- தொழிற்சாலைகள் சட்டம், 1948 (14 வயது)
- தோட்ட தொழிலாளர்கள் சட்டம், 1951 (12 வயது) சுரங்கச் சட்டம், 1952 (15 வயது)
- தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் அமைக்கப்பட்ட ஆண்டு : **2005**
- வீட்டு வேலைகள் உட்பட அனைத்து வகையான குழந்தை தொழிலாளர் முறை உச்சநீதிமன்றத்தால், தடை செய்யப்பட்ட வருடம். **2006**

## சமய (அ) மத சுதந்திர உரிமை : (விதி 25 - 28)

**விதி 25 :** எல்லோரும் தங்கள் மனசாட்சிக்கு உகந்த சமயத்தை, சமய நம்பிக்கையைக் கொள்ளவும். சுதந்திரமாக அச்சமயத்தைப் பின்பற்றவும், மனதில்படும் மதச்சடங்குளைச் செய்யவும், தான் பின்பற்றும் மதத்தின் உண்மை நெறியை பரப்பவும் உரிமை பெற்றிருக்கிறார்கள்.

**விதி 26 :** மதம் சம்பந்தமான விவகாரங்களை நிர்வகிக்கும் உரிமை

**விதி 27 :** குறிப்பிட்ட ஒரு மதத்தின் வளர்ச்சிக்காக வரி செலுத்தாமலிருக்க உரிமை

**விதி 28 :** கல்விக் கூடங்களில் சமய போதனைகள் மீதான கட்டுப்பாடு

www.Padasalai.Net

## பண்பாடு மற்றும் கல்வி உரிமைகள்: (விதி 29 (ம) 30)

**விதி 29 :** சிறுபான்மையின்ரின் கல்வி, எழுத்து, வடிவம், மொழி, பண்பாடு மற்றும் நலன் காத்தல்,

**விதி 30 :** சிறுபான்மையினர் கல்வி நிலையங்களை அமைக்கவும், நிர்வகிக்கவும் உரிமை சிறுபான்மையினர் எனும் சொல் அரசியலமைப்பில் எங்கும் வழங்கப்படவில்லை.

## அரசியலமைப்புச் சட்டப்படி பரிகாரம் தேடும் உரிமை (விதி 32)

- அடிப்படை உரிமைகள் மறுக்கப்படும் போது விதி 32-ன் கீழ் நேரடியாக உச்சநீதிமன்றத்தை அணுகலாம்.
- உச்சநீதிமன்றம் அடிப்படை உரிமைகளை நிலைநாட்ட பின்வரும் 5 வகை நீதிப்பேராணைகளைப்பிறப்பிக்கும்.
- நீதிப்பேராணைகள் இங்கிலாந்திலிருந்து எடுக்கப்பட்டது. இவை லத்தின் வார்த்தைகள் ஆகும்.

1. **ஹேபியஸ் கார்பஸ் - ஆட்கொணர்வு நீதிப்பேராணை**
    - சட்டத்திற்குப்புறம்பாக கடத்தப்பட்ட / காணாமல் போன ஒருவரை நீதிமன்றத்தின் முன் ஆஜர்படுத்த பிறப்பிக்கப்படும் உத்தரவு.
    - இதனை அரசுக்கெதிராகவும், தனிநபருக்கு எதிராகவும் வழங்கலாம்.
2. **மேண்டமஸ் (கட்டளை (அ) செயலுறுத்து நீதிப்பேராணை)**

- நீதிமன்றத்தால் ஒரு பொது அதிகாரிக்கோ, கீழமை நீதிமன்றங்களுக்கோ தீர்ப்பாயங்களுக்கோ, அரசுக்கோ தனது பொதுக் கடமையை செய்யுமாறு உத்தரவிடப்படுவது.
- தனிநபருக்கு, ஜனாதிபதி, கவர்னர், தலைமை நீதிபதிக்கும் உத்தரவிடமுடியாது.

3. **புரோகிபிசன் (தடையுறுத்து நீதிப்பேராணை)**
    - இது கீழமை நீதிமன்றங்களுக்கோ, தீர்ப்பாயங்களுக்கோ அவை தமது அதிகார வரம்பினை மீறாது இருக்கும்படி வழங்கப்படும் உத்தரவு.
    - இது நீதித்துறை, நீதித்துறை சார்ந்த அமைப்புகளுக்கு மட்டுமே வழங்கப்படும்.
    - நிர்வாகத்துறை மற்றும் தனிமனிதருக்கு எதிராக வழங்கப்பட முடியாது.
4. ஷெர்ஷியோரரி ( நெறிமுறையுறுத்து நீதிப்பேராணை)
    - கீழ் நீதிமன்றங்களோ, தீர்ப்பாயங்களோ அவற்றின் அதிகார வரம்பினை மீறி வழங்கியது உத்தரவுகளை தள்ளுபடி செய்ய வழங்கப்படும் ஆணை.
    - 1991 லிருந்து நிர்வாக அமைப்புகளுக்கு வழங்கப்படுகிறது.
5. க்வா -வாரண்டோ (தகுதிவினவு நீதிப்பேராணை)
    - பொதுப்பணியிலிருக்கும் ஒருவர் அப்பதவிக்கு தகுதியுடையவரா என ஆராய்வதற்காக வழங்கப்படும் உத்தரவு
    - சட்டப்பூர்வமான பொதுப்பணிகளுக்கு மட்டும் பொருந்தும்
    - தனியார் பதவிகளுக்கு இதனைப் பயன்படுத்த முடியாது
    - தனிநபர் எவா வேண்டுமானாலும் இந்திப்பேராணையை பயன்படுத்தலாம்

www.Padasalai.Net

- அடிப்படை உரிமைகளின் பாதுகாவலன் எப்படுவது? **உச்சநீதிமன்றம்**
- காரணம்: உச்சநீதிமன்றத்தில் நீதிப்பேராணை வழங்கும் விதி 32 என்பதே ஒரு அடிப்படை உரிமையாக உள்ளது
- உச்சநீதிமன்றம் விதி 32-ன் கீழ் நீதிப்பேராணையை எதற்கு வழங்கலாம்?
  **அடிப்படை உரிமைகளுக்கு மட்டும்**
- உயர்நீதிமன்றம் விதி 226-ன் கீழ் நீதிப்பேராணையை எதற்கு வழங்கலாம்?
  **அடிப்படை உரிமைகளுக்கும், பிற சாதாரண சட்ட உரிமைகளுக்கும்**
- டாக்டர். அம்பேத்கர் கூற்றுப்படி விதி 32 என்பது
    - I. இந்திய அரசியலமைப்பின் இதயமும், ஆன்மாவுமாகும்
    - II. இந்திய அரசியலமைப்பின் முக்கியமான ஷரத்தாகும்.
    - III. அடிப்படை உரிமைகளின் அடிப்படை ஆகும்.
- இந்திய அரசியலமைப்பின் முக்கியமான பகுதி எது?
  பகுதி - III - அடிப்படை உரிமைகள்

**விதி** 33 : முப்படைகள், துணை ராணுவப்படைகள், காவல்துறை ஆகியவற்றிற்கு அடிப்படை உரிமைகள் பொருந்துவதில் சில கட்டுப்பாடுகள் உள்ளன.

**விதி** 34 : ராணுவச்சட்டம் அல்லது ராணுவ ஆட்சி நடைமுறையிலிருக்கும் பகுதிகளுக்கு அடிப்படை உரிமைகள் பொருந்தாது.

**விதி** 35 : சில அடிப்படை உரிமைகள் தானாகவே நடைமுறைக்கு வரும். சிலவற்றை நடைமுறைபடுத்த பாராளுமன்றம் சட்டமியற்ற வேண்டும்.

| அடிப்படை உரிமைகள் | |
|---|---|
| இந்திய குடிமக்களுக்கு | இந்திய குடிமக்களுக்கும், |

| மட்டும். இவை வெளிநாட்டவருக்கு கிடையாது | வெளிநாட்டவருக்கு பொதுவாக வழங்கப்பட்டுள்ளவை |
|---|---|
| விதி 15<br>விதி 16<br>விதி 19<br>விதி 29<br>விதி 30 | விதி 14 விதி 24<br>விதி 20 விதி 25<br>விதி 21 விதி 26<br>விதி 21A விதி 27<br>விதி 22 விதி 28 விதி 23 |

- அடிப்படை உரிமைகள் அரசின் கட்டுபாடற்ற அல்லது சர்வாதிகார செயல்களுக்கு எதிராக வழங்கப்பட்டுள்ளன.
- அடிப்படை உரிமைகள் நிரந்தரமான உரிமைகள் அல்ல. இவற்றின் சில பகுதிகளை அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் தடைசெய்யவோ, நீக்கவோ பாராளுமன்றம் உரிமை பெற்றுள்ளது.
- தேசிய நெருக்கடி நிலை அமலில் இருக்கும் போது விதி 359-ன் படி, குடியரசுத்தலைவர் விதி 20 மற்றும் 21 -ஐ தவிர மற்ற அனைத்து அடிப்படை உரிமைகளின் செயல்பாட்டினை நிறுத்தி வைக்கலாம்.
- தேசிய நெருக்கடி நிலை அமலில் இருக்கும் போது, விதி 358-ன் படி, விதி 19-ன் கீழான ஆறு அடிப்படை சுதந்திரங்களும் தானாகவே செயலிழந்து விடும். ஆனால் ஆயுதமேந்திய கலவரத்தின் போது விதி 19 மறுக்கப்பட கூடாது
- உலகிலேயே விரிவான அடிப்படை உரிமைகளைக் கொண்டுள்ள நாடு : **இந்தியா**

www.Padasalai.Net

## 14. அரசுக்கொள்கையினை வழிகாட்டும் நெறிமுறைகள்

1. இக்கொள்கைகள் எப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளன?
   **பகுதி VI ல் விதி 36 லிருந்து 51 வரை**
2. இவை எங்கிருந்து எடுக்கப்பட்டன? **அயர்லாந்து அரசியலமைப்பிலிருந்து**
3. இதன் முக்கிய நோக்கம் என்ன?
   I. பொதுநல அரசினை உருவாக்குவது.
   II. மக்களின் சமூக பொருளாதார நலன் காத்தல்
   III. சட்டங்கள் இயற்றும் போதும் திட்டங்கள் தீட்டப்படும் போதும் அரசுக்கு வழிகாட்டியாக இருப்பவை.
   IV. நாட்டை ஆட்சி செய்வதற்கு அடித்தளமாக இருப்பவை.
   V. அரசிற்கு வழங்கப்பட்டுள்ள நேர்மறையான கட்டளைகள் ஆகம்.
4. இவை நீதிமன்றங்களில் நடைமுறைப்படுத்தப்படகூடியவை அல்ல. ஏனெனில் இவற்றை நடைமுறைப்படுத்த போதுமான அளவு வளங்கள் நாட்டில் இலலை.
5. மக்களின் சமூக பொருளாதரா ஜனநாயகத்தை உருவாக்க அடிப்படையாக அமைவது இக்கொள்கைகளாகும்

**சமத்துவ கொள்கைகள்:**

விதி 38 : வருமான ஏற்றத்தாழ்களை குறைத்தல்
விதி 39 (c) : சொத்துக்களின் சிலரிடமே குவிவதைத் தடுத்தல்

விதி 39 (d) : ஆண் பெண் இருபாலருக்கும் சமவேலைக்கு சம ஊதியம்
விதி 39 (a) : சம நீதி மற்றும் ஏமைகளுக்கு இலவச சட்ட உதவி
விதி 39 (j) : குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சி
விதி 43 (a) : தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தில் பங்கு பெறும் வாய்ப்பு
விதி 47 : மக்களின் ஊட்டச்சத்துணர்வு மற்றும் பொது சுகாதாரத்தைப் பேணுதல்

**காந்தியக் கொள்கைகள்:**

விதி 40 : கிராமப் பஞ்சாயத்து அமைப்புகளை அமைத்தல்
விதி 43 : கிராமப்புறங்களில் குடிசைத்தொழில்களை ஊக்குவித்தல்
விதி 43 (b) : கூட்டுறவு சங்கங்களை அமைத்து நிர்வகித்தல்
விதி 46 : எஸ்சி, எஸ்டி மற்றும் பிற நலிவடைந்த பிரிவினரின் நலன் காத்தல்
விதி 47 : போதை மருந்து மற்றும் மது வகைகளை தடை செய்தல்
விதி 48 : பசுக்கள், கன்றுகள் மற்றும் கால்நடைகள் வதை செய்வதை தடுத்தல், காத்தல்

**தாராளமயக் கொள்கைகள்:**

விதி 44 : அனைத்து குடிமக்களுக்கும் ஒரே சீரான உரிமையியல் தொகுப்புச் சட்டம் வழங்குதல்
விதி 45 : 6 முதல் 14 வயது வரை குழந்தைகளுக்கு பாதுகாப்பு வழங்குதல்
விதி 48 : வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ப்புப் பணி நவீன முறையில் அமைத்தல்
விதி 48 (a) : சுற்றுச்சுழல் மற்றும் வன உயிரிகளைக் காத்தல்
விதி 49 : வரலாற்று, புராதன சின்னங்களைக் காத்தல்
விதி 50 : நீத்திதுறையை நிர்வாகத்திலிருந்து பிரித்தல்
விதி 51 : பன்னாட்டு அமைதியையும், ஒற்றுமையையும் வரைதல்

- மக்களுக்கு பொறுப்பான அரசாங்கம் எதுவும் அரசுக் கொள்கையினை வழிகாட்டும் நெறிமுறைகளை சாதாணமாக்கருதக்கூடாது **அல்லாதி கிருஷ்ணசாமி அய்யர்.**
- அடிப்படை உரிமைகளும் அரசுக் கொள்கையின் வழிகாட்டும் நெறிமுறைகளும் இந்திய அரசியலமைப்பின் மனசாட்சியாகும் **கிரான்வில்லி ஆஸ்டின்.**

## 15. அடிப்படைக் கடமைகள் – 11 கடமைகள்

- அடிப்படைக் கடமைகள் ரஷ்யாவிலிருந்து பின்பற்றப்பட்டவை.
- அடிப்படைக் கடமைகள் இந்தியா தவிர, கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, ஆஸ்திரேலியா, ஜப்பான் நாடுகளில் உள்ளது.
- அடிப்படைக் கடமைகளை உருவாக்க பரிந்துரைத்த கமிட்டி எது?
  1976-ல் காங்கிரஸ் கட்சியால் உருவாக்கப்பட்ட **ஸ்வரண்சிங் கமிட்டி.**
  இது 1975-ல் உள்நாட்டு தேசிய நெருக்கடி நிலையின் போது உருவான வன்முறை நிகழ்வுகளைத் தொடர்ந்து அமைக்கப்பட்டது.
- அடிப்படைக் கடமைகள் - அரசியலமைப்பு உருவாக்கப்பட்ட போது இடம் பெறவில்லை.
- அடிப்படைக் கடமைகள் எப்போது இந்திய அரசியலைப்பில் சேர்க்கப்பட்டது?



www.Padasalai.Net

**1976- ஆம் ஆண்டு - 42 வது திருத்தம் மூலம்**

- 42- வது திருத்தம் 976 எதனை அரசியலமைப்பில் சேர்த்தது?
  **பகுதி - VI-A வையும் விதி 51-A வையும் 10 அடிப்படைக் கடமைகளையும் சேர்த்தது.**
- ஆரம்பத்தில் (1976-ல்) 10 அடிப்படைக் கடமைகள் இருந்தன.
- தற்போது (2002 லிருந்து) 11 அடிப்படைக் கடமைகள் உள்ளன.
- 11-வது அடிப்படைக் கடமை எந்தத் திருத்தத்தின் மூலம் சேர்க்கப்பட்டது?
  **86-வது திருத்தம், 2002**
- அடிப்படைக் கடமைகள் குறித்த மற்றொரு கமிட்டி வர்மா கமிட்டி (1999)
- அடிப்படைக் கடமைகள் நீதிமன்றத்தால் நடைமுறைப்படுத்தக் கூடியவை அல்ல.
- அடிப்படை உரிமைகள் மட்டுமே நீதிமன்றத்தால் நடைமுறைப்படுத்தக் கூடியவை.

## ➤ அடிப்படை கடமைகள் : விதி 51-A

1. விதி 51-A (a) : அரசியலமைப்பின் பின்பற்றுதல் மற்றும் அதன் குறிக்கோள்கள், அமைப்புகள், தேசியக்கொடி, தேசியகீதம் ஆகியவற்றிற்கு மரியாதை அளித்தல்.
2. விதி 51-A (b) : நமது சுதந்திர போரட்டத்தின் உயரிய குறிக்கோளை பின்பற்றுதல் மற்றும் போற்றி வளர்த்தல்.
3. விதி 51-A (c) : இந்தியாவின் இறைமை, ஒற்றுமை, ஒருமைப்பாட்டை பாதுகாத்தல்.
4. விதி 51-A (d) : நாட்டினைப் பாதுகாத்தல், தேவைப்படும் போது தேசியப் பணிபுரிதால்.
5. விதி 51-A (e) : சமய, மொழி, வட்டார வேறுபாடுகளைக் களைந்து, இந்திய மக்களுக்குள் பொது சகோதரத்துவத்தை மேம்படுத்துதல், பெண்களின் மேன்மையை கெடுக்கும் செயல்களைக் கைவிடல்.
6. விதி 51-A (f) : நமது பல்வேறு கலாச்சாரத்தின் உயர்ந்து பாரம்பரியத்தை பேணுதல்.
7. விதி 51-A (g) : காடுகள், ஏரிகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கை சூல்நிலையை பாதுகாத்தல்.
8. விதி 51-A (h) : ஆய்ந்தறியும் மனநிலை பகுத்தறிவு விசாரணை உணர்வுடன் சீர்திருத்தங்களை ஏற்படுத்துதல்.
9. விதி 51-A (i) : பொதுச் சொத்துக்களைக் காத்தல்; வன்முறையைக் கைவிடுதல்.
10. விதி 51-A (j) : தனிமனித முயற்சி மற்றும் கூட்டுறவு முயற்சியின் மூலம் நாட்டினை தொடர்ந்து முன்னேற்றப பாதையில் வளரச் செயதல்.
11. விதி 51-A (k) : 6-லிருந்து 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு அவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கல்வி கற்கும் வாய்ப்பினை ஏற்படுத்தித் தருதல். இக்கடமை 86-வது திருத்தம், 2002-ன் மூலம் சேர்க்கப்பட்டது

www.Padasalai.Net

## 16. இந்தியாவின் தலைமை தணிக்கை மற்றும் கணக்காய்வுத் தலைவர் (GAG : விதிகள்:148 TO 151)

- CAG பதவியைப்பற்றிக் கூறும் விதி: **விதி 148**
- இந்தியாவின் தணிக்கை (ம) கணக்குகள் துறையின் தலைவர் யார்? **CAG**
- CAG யாரால் நியமிக்கப்படுகிறார்? **குடியரசுத்தலைவரால்**
- CAG க்கு 3-வது அட்டவணைப்படி பதவிப் பிரமாணம் செய்து வைப்பவர்:
  **குடியரசுத்தலைவர்**
- CAG-ன் பதவிக்காலம் எவ்வளவு? **6 வருடம் அல்லது 65 வயது வரை**

- CAG- தனது ராஜினாமாவை யாரிடம் அளிப்பார். **குடியரசுத்தலைவிடம்** அளிப்பார்.
- CAG –னை பதவிநீக்கம் செய்வது யார்? **குடியரசுத்தலைவர்** - உச்சநீதிமன்ற நீதிபதிகளை பதவி நீக்கம் செய்வது போல பாராளுமன்ற இரு அவைகளின் சிறப்புப் பெரும்பான்மை பெறும் தர்மானத்தின் அடிப்படையில் பதவி நீக்கம் செய்வார்.
- CAG-ன் மறு நியமனம் செய்யப்படுவாரா? **மறுநியமனம் கிடையாது**
- CAG-ன் சம்பளம் ரூ.90,000/- (உச்சநீதிமன்ற நீதிபதிகளுக்கு இணையான சம்பளம்). இந்திய தொகுப்பு நீதியிலிருந்து வழங்கப்படுகிறது.

**CAG-ன் அதிகாரங்கள் விதி: 149**

1. மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளின் வரவு - செலவு கணக்குகளை தணிக்கை செய்தல்
2. இந்திய தொகுப்பு நிதி, அவசர செலவினத்திற்கான நிதி, மாநில தொகுப்பு நிதி ஆகியவற்றின் கணக்குகளை தணிக்கை செய்தல்.
3. அரசு நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், பிற வாரியங்களின் கணக்குகளை தணிக்கை செய்தல்.
4. 1976- க்குப்பிறகு மத்திய அரசு கணக்குகளை பராமரிக்கும் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார். தற்போது மாநில அரசின் கணக்குகளை மட்டும் பராமரிப்பார்.
5. மத்திய, மநில அரசுகளின் வரவு - செலவு கணக்குகளை தயாரிப்பதில்லை. தணிக்கை மட்டுமே செய்வார்.
6. செலவான பணம் சரியாக செலவிடப்பட்டுள்ளதா என மட்டும் பார்ப்பார். அரசு, பணம் எடுக்க, செலவிட இவர் அனுமதி தேவையில்லை.
7. ஆனால் இங்கிலாந்தில், CAG-ன் அனுமதி பெற்றே அரசு பொதுப்பணத்தை பெற முடியும்.

www.Padasalai.Net

**CAG –யின் அறிக்கை:**

1. CAG-ன் தணிக்கை அறிக்கை: **விதி** 151
   மத்திய தணிக்கை அறிக்கையை - குடியரசுத் தலைவரிடமும்
   மாநில தணிக்கை அறிக்கையை - ஆளுநரிடமும் சமர்ப்பிப்பார்
2. பாராளுமன்றத்துடன் இவருக்கு நேரடி தொடர்பு கிடையாது.

CAG-ன் அறிக்கை
⇓
குடியரசுத்தலைவரிடம்
⇓
அவர் பாராளுமன்ற இரு அவைகள் முன்வைப்பார்
⇓
அவ்வறிக்கை பொதுக்கணக்குக் குழு முன் வைக்கப்படும்
⇓
பொதுக்கணக்கு குழு அதன்மேல் அறிக்கை தயாரிக்கும்
⇓
அவ்வறிக்கை பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படும்

ஏதேனும் தவறான வழியில் பணம் செலவிடப்பட்டு ஊழல் நடந்தால் இங்கு கண்டறியப்படும்

**CAG :**

- பொதுப் பணத்தின் பாதுகாவலன் எனப்படுபவர் : **CAG**
- பொதுக்கணக்குக்குழுவின் கண்களும், காதுகளும் எனப்படுவர் : **CAG**
- B.R. அம்பேத்கர் கூற்றுப்படி, இந்திய அரசியலமைப்பின் முக்கியமான பதவி : **CAG**
- தற்போதைய CAG யார் : **சசிகாந்த் சர்மா**
- இந்தியாவின் முதல் CAG யார் ? **நரஹரிராவ்**

## 17. தேசிய மனித உரிமைகள் ஆணையம்

**மனித உரிமைகள் :** தனி மனிதன் சுதந்திரமாகவும், சமத்துவத்துடனும், கண்ணியத்துடனும் வாழ வழிவக்கும் உரிமைகளாகும்.

- இங்கிலாந்தில் மனித உரிமைகளுக்கான மேக்ன கார்த்தா வெளியிடப்பட்ட ஆண்டு: **1215**
- மனித உரிமைகள் மீதான பிரஞ்சுப் பிரகடனம் வெளியிடப்பட்ட ஆண்டு : **1789**
- அமெரிக்காவின் மனித உரிமைகள் மசோதா வெளியிடப்பட்ட ஆண்டு : **1791**
- ஐ.நா. சபையினால் மனித உரிமைகள் பிரகடனம் ஏற்றுக் கொள்ளப்பட்ட நாள் : **டிசம்பர் 10, 1948.**
- சர்வதேச மனித உரிமைகள் தினம்: **டிசம்பர் 10,1948**
- மனித உரிமைகள் மீதான வியன்னா பிரகடனம் : **1993**
- இவ்வாணையம் எச்சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டது? **மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1993.**
- இச்சட்டம் நடைமுறைக்கு வந்த நாள் : **செப்டம்பர் 28, 1993.**
- இந்தியாவில் மனித உரிமைகளின் பாதுகாவலன் எனப்படுவது எது? **தேசிய மனித உரிமைகள் ஆணையம்.**
- தேசிய மனித உரிமைகள் ஆணையம் அமைக்கப்பட்ட நாள் : **அக்டோபர் 12, 1993.**
- இவ்வாணையம், ஒரு தலைவர் மற்றும் 4 உறுப்பினர்களை உடையது.
- தலைவர் - உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக பணியாற்றி ஓய்வு பெற்றவராக இருப்பார்.
- 4 உறுப்பினர்கள் :
    1. ஓய்வு பெற்ற / பணியிலுள்ள உச்சநீதிமன்ற நீதிபதி ஒருவர்
    2. ஓய்வு பெற்ற / பணியிலுள்ள உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர்
    3. மனித உரிமைகள் குறித்து சிறப்பு அனுபவ அறிவு பெற்றுள்ள இரண்டு நபர்கள்

பதவி வழி 4 உறுப்பினர்கள்

1. சிறுபான்மையினருக்கான தேசிய ஆணையர் (1993)
2. தாழ்த்தப்பட்டோருக்கான தேசிய ஆணையர் (19.02.2004)
3. பழங்குடியினருக்கான தேசிய ஆணையர் (19.02.2004)
4. தேசிய பெண்களுக்கான ஆணையர் (31.01.1992)

- தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவரையும், உறுப்பினர்களையும் நியமிப்பது யார் ? **குடியரசுத்தலைவர்**
- தலைவரையும் உறுப்பினர்களையும், குடியரசுத் தலைவருக்கு பரிந்துரை செய்யும் தேர்வுக்குழு யாரை உள்ளடக்கியது?
    1. பிரதமர் (குழுவின் தலைவர்)
    2. லோக்சபா சபாநாயகர்

www.Padasalai.Net

3. ராஜ்யசபா துணைத்தலைவர்
4. மக்களவை எதிர்கட்சித் தலைவர்
5. மாநிலங்களவை எதிர்கட்சித்தலைவர்
6. மத்திய உள்துறை அமைச்சர்

- மனித உரிமைகள் ஆணைய தலைவர், உறுப்பினர்களின் பதவிக்காலம் - 5 ஆண்டு (அ) 70 வயது வரை இதில் எது முன்னதோ அது வரை
- இவர்களை பதவிநீக்கம் செய்வது யார்? குடியரசுத்தலைவர் - உச்சநீதிமன்ற விசாரணை அறிக்கையின் பேரில்

**<u>பணிகள் :</u>**

1. மனித உரிமை மீறல் குறித்த புகார்னை விசாரிக்கிறது.
2. சிறைச்சாலைகள் இதா காப்பிடங்களை மேற்பார்வையிடுகிறது.
3. மனித உரிமைகள் தொடர்பான ஆராய்ச்சிகள், உடன்படிக்கைகளை செய்கிறது.
4. அரசியலமைப்பின் மற்றும் பிற சட்டங்களில் மனித உரிமைகள் குறித்து உள்ள பாதுகாப்பு முறைகளை சீராய்வு செய்யலாம்.

**<u>ஆணையத்தின் செயல்பாடு:</u>**

